# தமிழரசு

16.5.1995 ரூ.3










பம்பாய் சகோதரிகள் - இன்னிசை

உலகத் தமிழ்
மாநாடு:

இன்னிசை
நிகழ்ச்சிகளில்
சில..




திருமதி சரோஜாசுந்தரம் குழுவினரின் தேவார இன்னிசை

சிக்கல் சகோதரிகள் - புல்லாங்குழலிசை



# இந்த இதழில்...


★ கோவை மாவட்டத்திற்கு ரூ.3 கோடிக்கு மேலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார் ......... 3

★ முத்தமிழ் வளர்த்த மாமதுரையில் சித்திரைப் பொருட்காட்சி ! ......... 5

★ தீரன் சின்னமலை பிறந்தநாள் விழா ! ......... 7

★ உலகச் சாதனையை எட்டிப்பிடித்த எட்டு வயதுச் சிறுவன் ! ......... 9

★ கோவையில் மகளிர் மேம்பாடு ......... 11

★ நமது பண்பாடு
- *பாவலர் பாலசுந்தரம்* ......... 13

★ வளம் மிகுந்த வால்பாறை ......... 15

★ அரிய கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பு ......... 17

★ தமிழ் நிலைபெற வேண்டும் !
-*டத்தோ ஜி. வடிவேலு* ......... 19

★ நூல் நயம் ......... 23

★ சாதனைப் பூக்களை மலர்விக்கும் சோலைவனம் ! ......... 24

★ கட்டட மையம் ......... 30

★ இலக்கியத்தில் காதல் !
- *டாக்டர் சாரதா நம்பி ஆரூரன்* ......... 35

★ மாணவர் பக்கம் ......... 42

★ கோவைச் செய்திகள் ......... 45

★ கோவை மாவட்டம் - குடிநீர் வழங்கும் பணிகள் ......... 46




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு. (21)*

* ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்றுவிட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும்.


**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு: 2026
வைகாசித் திங்கள்: 2
மலர்: 25 இதழ்: 22
16.5.1995 விலை: ரூ. 3

# கோவை மாவட்டத்திற்கு

# ரூ.3 கோடிக்கு மேலான நலத்திட்ட உதவிகளை

# மாண்புமிகு முதலமைச்சர் வழங்கினார்!

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 20.8.93 அன்று கோவைக்குச் சென்றிருந்தபோது, நலிவுற்ற மக்களுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகளும், அப்போது அவர் ஆற்றிய உரையும், 'தமிழரசு' கோவை மாவட்டச் சிறப்பிதழ் வெளியிட்டதையொட்டி இப்போது நினைவுகூரப் படுகிறது:*



கோவை மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 20.8.93 அன்று காலை, கோவை வ.உ.சி.பூங்கா திடலில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 6212 நபர்களுக்கு ரூபாய் மூன்று கோடியே 10 இலட்சத்து 62 ஆயிரத்து முந்நூற்று இருபத்தி ஏழு மதிப்புள்ள பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரை ஆற்றியபோது குறிப்பிட்டதாவது:

மக்கள் சக்தியின் பேராதரவோடும் நல் வாழ்த்துக்களோடும், உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு முனைப்புடன் மக்கள் பணியாற்றிவருகிறது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். மக்களாட்சியின் மாட்சிமையைப் பெரிதும் மதித்து, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதிலும், மக்கள் தான் இறுதி எஜமானர்கள் என்ற ஜனநாயகக் கோட்பாட்டிலும், நம்பிக்கை வைத்துள்ள நாங்கள் ஐந்தரைக்கோடி தமிழக மக்களின் எண்ணங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும், ஏற்றாற்போல இயங்கி வருகிறோம் என்பதை நாடும் அறியும், நல்லவர்களும் அறிவார்கள்.

சில தேச விரோத சக்திகள், சமூக விரோத சக்திகள், வன்முறையாளர்கள் ஆகியோரது கொடிய பார்வை, என்மீது படிந்துள்ளது என்ற உண்மையை நான்

நன்கு அறிந்திருந்த போதிலும் எனது அன்பிற்குரிய மக்களைச் சந்திக்காமல் இருக்கமுடியாது என்ற காரணத்தால்தான், என் உயிரையும் பொருட்படுத்தாது, நான் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் சென்ற ஒவ்வொரு மாவட்டத்திலும், கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்து, பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நானே எனது கைப்பட அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கிவந்திருக்கிறேன்.

மக்களின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் பல பிரகடனங்களை அறிவித்துக் கொண்டிருப்பதைவிட, பல்வேறு நலத் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அத்திட்டங்களின் பலன் சென்று அடைகிறதா என்பதைக் கண்காணிப்பதில், ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளது எங்கள் அரசு. அதன் அடிப்படையில், அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளைப் பெற்று, தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரிவினர்களிடமிருந்து, மனுக்களை நேரில் பெற்று, துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற





உன்னதமான நல்லெண்ணத்தில், சென்ற ஆண்டு ஒவ்வொரு திங்கட்கிழமையையும், குறிப்பிட்ட மாவட்டத்திற்கு என ஒதுக்கிப் பொது மக்களிடமிருந்து குறைகளைக் கேட்டு மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுத்தேன்.

பொது மக்கள் குறை தீர்ப்பது என்பதைச் சாதாரண பணியாகக் கருதாமல், அதில் தனிக் கவனம் செலுத்தி, மக்களுடைய குறைகளைக் களையவேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணைகள் இட்டதோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு துணை ஆட்சியர் அந்தஸ்தில் இதற்காக ஒரு தனி அலுவலரை நியமித்து, குறைதீர்க்கும் பணிக்கு ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளேன். பல்வேறு அரசு நலத்திட்ட பலன்கள், மக்களுக்கு நேரடியாகச் சென்று அடைவது இல்லை என்று, சிலர் குறைகூறி வந்ததால், என்னிடம் மனுக்களை அளித்த மனுதாரர்களுக்கு, நியாயமான முறையில், அரசு நல்த்திட்ட பலன்கள், சென்று அடைய வேண்டும் என்ற எண்ணத்தில், அரசாங்கத்தின் செலவில், மனுதாரர்களைச் சென்னைக்கு நேரில் வரவழைத்து, உதவிகளை

நானே வழங்கும், புதிய நடைமுறையைச் செயல்படுத்தினேன்.

23.3.1992 அன்று மாவட்ட வாரியாக மனுக்களைப்பெற ஆரம்பித்து 20.7.1992 முடிய ஒரு சுற்று எல்லா மாவட்ட மக்களிடமிருந்தும், மனுக்களைப்பெற்று, அம்மனுக்களை விசாரணை செய்து, 36,438 தகுதியுடைய மனுதாரர்களை 13.7.1992 முதல் 2.11.1992 வரை பல நாட்களில் வரவழைத்து 52 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கியுள்ளேன்.

இரண்டாவது கட்டமாகத் தற்போது, மீண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்கள் மீது, விரைந்து நடவடிக்கை எடுத்து, அரசு நலத்திட்ட உதவிகளை, நானே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று வழங்குவதற்கு ஒரு திட்டம் தீட்டினேன். அந்தச் சிந்தனையின் செயல்பாடுதான், இன்று கோவை மாவட்டத்தில், 6200 பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மனமகிழ்ச்சியுடன் வழங்க வந்துள்ளேன்.

இன்று வழங்க உள்ள உதவிகளை ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் வழங்கவேண்டும் என்று நான் விரும்பினாலும், நேரம் இன்மையால் 100 பேருக்கு மட்டும் உதவிகளை நானே வழங்க உள்ளேன். மற்றவர்கள் அனைவருக்கும், அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் எனது முன்னிலையிலேயே வழங்குவார்கள். இந்த விழாவில் உதவிகளைப் பெறும் எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகள், தங்கள் வாழ்க்கையில் மேலும் பல முன்னேற்றங்களை அடைந்து, சீரோடும், சிறப்போடும் வாழவேண்டும் என்று எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

● சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு என்.டி. ராமாராவ் அவர்கள் சந்தித்துப் பேசினார். (30.4.95)

● சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, கர்நாடக முதல்வர் திரு தேவகவுடா அவர்கள் சந்தித்துப் பேசினார். (10.5.95)

● சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, மகாராஷ்டிரா முதல்வர் திரு மனோகர் ஜோஷி அவர்கள் சந்தித்துப் பேசினார். (28.5.95)

நான்காம் அட்டை:

நடிகர் திலகம் திரு சிவாஜிகணேசன் அவர்களுக்கு, பிரான்சு நாட்டின் 'செவாலியே' விருது வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.



# முத்தமிழ் வளர்த்த மாமதுரையில் சித்திரைப் பொருட்காட்சி!

முத்தமிழ் வளர்த்த மாமதுரையில், சித்திரைப் பொருட்காட்சி, 23.4.95 அன்று மிகச் சிறப்பாக நடந்தது. இது, தமிழ்நாட்டின் 82-வது அரசுப் பொருட்காட்சியாகும். மதுரையைப் பொறுத்த வரை இது 14-வது பொருட்காட்சியாகும்.

இப்பொருட்காட்சியில் 16 அரசுத்துறை அரங்குகளும், 6 அரசுச் சார்பு நிறுவனங்களும் பங்குகொண்டு சிறப்பித்தன. அவை:

**அரசுத்துறைகள்**

செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத்துறை, தொழில் துறை, இந்து சமய அறநிலையத் துறை, பொதுப்பணித்துறை, மருத்துவக் கல்வித்துறை, மீன் வளத் துறை, வேளாண்மைத்துறை.

வனத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, காவல்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, கூட்டுறவுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை.

**அரசுச் சார்பு நிறுவனங்கள்**

பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை மாநகராட்சி, தமிழ்நாடு குடி நீர் மற்றும் வடிகால் வாரியம், ஆவின் நிறுவனம், தமிழ்நாடு எய்ட்ஸ் தடுப்புச் சங்கம் முதலியன.

மத்திய அரசுச் சார்பு நிறுவனமான ஆயுள் காப்பீட்டுக் கழக அரங்கும் இடம் பெற்றிருந்தது.

பொதுமக்களின் அன்றாடத் தேவைகளான வீட்டு உபயோகப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், அணிகலன்கள், அழகு சாதனங்கள், ஆயத்த ஆடைகள், பரிசுப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் 49 அங்காடிகள் இடம் பெற்றுள்ளன. தனியார் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் வகையில் 16 அரங்குகளை அமைத்துள்ளன.

கடந்த ஆண்டு மதுரையில் 51 நாட்கள் நடைபெற்ற பொருட்

காட்சியை ஏறத்தாழ 4 இலட்சத்து 93 ஆயிரம் பேர் கண்டு களித்தனர். நுழைவுக் கட்டணம் மூலம் மட்டும் வசூலான தொகை ரூ.8.91 இலட்சம். நிகர லாபமாக அரசுக்கு ரூ.7.41 இலட்சம் கிடைத்தது.

கடந்த நிதி ஆண்டில் (1994-95) இதுவரை மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், காரைக்குடி, தருமபுரி, வேலூர், திருச்சி ஆகிய இடங்களில் 8 அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளன.

இவற்றுள் எட்டாவது பொருட்காட்சி, தற்போது திருச்சியில் நடைபெற்று வரும் பொருட்காட்சியாகும். இந்த 7 அரசுப் பொருட்காட்சிகள் மூலம் அரசுக்கு ரூ.59.56 இலட்சம் நிகர இலாபம் கிடைத்துள்ளது.

ஆரம்ப காலம் தொட்டு இதுவரை தமிழ்நாடு முழுவதும் நடந்து முடிந்த 79 பொருட்காட்சிகள் மூலம் அரசுக்கு மொத்த வருமானம் ரூ.7.62 கோடியும் அனைத்துச் செலவுகளும் போக, நிகர லாபமாக ரூ.5.14 கோடியும் கிடைத்துள்ளது.

மதுரையில் கடந்த ஆண்டு வரை நடைபெற்ற 13 பொருட்காட்சிகள் மூலம் மட்டும் அரசுக்குக் கிடைத்த நிகர இலாபம் ரூ.56.43 இலட்சமாகும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே, அரசு நேரடியாகப் பொருட்காட்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருவது மட்டும் அல்லாமல், இலாபகரமாகவும் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**– துரை. தாமரைச் செல்வம்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை மாவட்டம்**


*All under one Roof*

**JET DYEING**

**Automatic Drier with all facility for Hosiery Export & Local**

**QUALITY DYEING - FAST DELIVERY - BULK SUPPLY**

**ROOPA PROCESSING**

**(BALU GARDEN)**

**S.F. No.119&1, Kunnankalpalayam,**

**Arulpuram (P.O.) TIRUPUR 641 605**

**Phone: 710 950, 710 433**

**Sri Arun Chemical Industries**

**Mfrs: RAJ SOFT, RAJ FIX & RAJPAL 2B, BVN**

**Our Sister Concern:**

**BALU BLEACHING - BALU STEAM - BALU SCREENS - BALU CURING**




# தீரன் சின்னமலை பிறந்தநாள் விழா

தமிழக அரசின் சார்பில், பெரியார் மாவட்டம், காங்கேயத்தில் உள்ள பி.எஸ்.ஜி. பொன்னம்மாள் திருமண மண்டபத்தில் தீரன் சின்னமலையின் 239-வது பிறந்தநாள் விழா சிறப்பாக 1.4.95 அன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் திரு கே. ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் தீரன் சின்னமலையின் சந்ததியினர் 10 பேர்களுக்கு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். பிறகு அவர் பேசியதாவது:

"இந்திய நாடு தீரன் சின்னமலை போன்ற வீரர்கள் நிறைந்த நாடு. தீரன் சின்னமலை இந்த நாட்டுக்காகப் போராடி உயிர் நீத்த மாவீரன் ஆவார். இதை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வெள்ளையர்களின் குதிரைப் படையைக் கொங்கு மண்டலத்திலிருந்து, வீரனாகத் தனித்து நின்று தீரன் சின்னமலை விரட்டியடித்தார். தீரன் சின்னமலைக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் தீர்த்தகிரி. வெள்ளையர்களுக்கு எதிராக வரிகொடா இயக்கத்தை நடத்தினார். சமையல்காரன் ஒருவன் தீரன் சின்னமலையைக் காட்டிக் கொடுத்தான். இதனால் தீரன் சின்னமலையை வெள்ளையர்கள் பிடித்து சங்ககிரிக் கோட்டையில் தூக்கிலிட்டுக் கொன்றனர். அவர் அழிந்துவிட்டார். ஆனால், அவரது வீரம் அழியவில்லை. அவர் சிந்திய இரத்தத்தில் சுதந்திர மலர்கள் பூத்தன. அந்த மலர்கள் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன" என்றார்.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தியாகிகளை மதித்து அவர்களுக்குப் பல்வேறு நன்மைகளைப் புரட்சித்தலைவி செய்து வருகிறார். தியாகி தீரன் சின்னமலைக்குப் பிறந்தநாள் விழா நடத்தி அவரது வாரிசுகளைக் கவுரவிக்கும் முதல்வராகப் புரட்சித்தலைவி விளங்குகிறார்.

தீரன் சின்னமலை வீரத்தின் சிகரமாக விளங்கினார். அவர், திப்புசுல்தானுடன் சேர்ந்து வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்தார். 'வெள்ளையனே வெளியேறு' என்று வீர முழக்கமிட்டவர். வெள்ளையர்களின் பீரங்கிப் படைகளைக் கண்டு பயப்படாதவர். அவரது வீர தீரச் செயல்களை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. அவருக்குச் சிறப்பு செய்யும் வகையில் புரட்சித்தலைவர் "தீரன் சின்னமலை" பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்கினார். ஈரோட்டில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவல கத்திற்குத் தீரன் சின்னமலை பெயர் சூட்டப் பட்டது. புரட்சித்தலைவி, தீரன் சின்னமலையின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவிகள் வழங்கி கவுரவித்து வருகிறார். தீரன் சின்ன மலை கொங்கு மண்டலத்தில் வணங்கா முடியாகத் திகழ்ந்தவர். தமிழன் என்றும் யாருக் கும் தலை வணங்கமாட்டான் என்று சுட்டிக் காட்டியவர்" என்றார்.

தீரன் சின்னமலையின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு துரை இராமசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்:

"இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப் பதற்காக உயிர் நீத்த தியாகியாகத் தீரன் சின்னமலை விளங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்குப் புரட்சித்தலைவி, பிறந்த நாள் விழா நடத்திச் சிறப்பித்துள்ளார். தியாகிகளுக்கு விழா நடத்துவதில் புரட்சித்தலைவிக்கு நிகர் அவர்தான். சரித்திரம் படைத்த நாயகர்களை இன்று சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கும் நாயகி பாராட்டுகிறார். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மனதில் இடம் பெற்ற டாக்டர் அம்பேத்கருக்குச் சென்னையில் புரட்சித்தலைவி சிலை அமைத்தார். அதுபோல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கும், சென்னையில் சிலை வைத்தார். அவர் பிறந்த பசும்பொன் கிராமத்தில் அவருக்கு நினை வாலயம் கட்டினார். மற்ற முதல் அமைச்சர் செய்யாததைப் புரட்சித்தலைவி செய்து வருகிறார். போரில் எதிரிகளைத் தீரன் சின்ன மலை புறமுதுகுக் காட்டி ஓடச் செய்தார். வீரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்" என்று கூறினார்.

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் பேசுகையில், "தீரன் சின்னமலை வீரத் தமிழனாக வாழ்ந்தார். வீரத்தின் தியாகச் சுடராக விளங்கியவர் அவர். கொங்கு மண்டலத்திற்குப் பெருமை சேர்த்தவர். தாயகம் சுதந்திரம் அடைய வேண்டும் என்று வெள்ளை யர்களை எதிர்த்துப் போராடினார்" என்றார்.

விழாவில், 153 பேருக்கு ரூ.4.20 இலட்சம் மதிப்புள்ள நலத் திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர்கள் பல்வேறு துறைகளின் மூலம் வழங்கினார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு சி. மாணிக்கம், திரு வே. பெரியசாமி, திருமதி கவிநிலவு தர்மராஜ், திரு வி.பி. பெரியசாமி, பெரியார் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் திரு கே.கே. காளியப்பன், மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு ஆர்.என். கிட்டுசாமி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழக இயக்குநர் திரு கவுந்தி மணிவண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**மு. கிருஷ்ணன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெரியார் மாவட்டம்.**



*படிப்பு எதற்கு? அறிவுக்கு. அறிவு எதற்கு? மனிதன் மனி தத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய் - நாணயமாய் வாழ்வதற்கு.*

*- தந்தை பெரியார்*

# உலகச் சாதனையை எட்டிப் பிடித்த எட்டு வயதுச் சிறுவன்!

**நீ**ச்சல் வீரர்களுக்குச் சாதனை புரிய சவால் விடும் இடமாக, பாக்ஜலசந்தி விளங்கி வருகிறது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள சுமார் 32 கி.மீ. தூரம் கொண்ட பாக்ஜலசந்தி ஆபத்து நிறைந்த பகுதியாகும். எனவே, இந்தக் கடல் பகுதியை நீந்திக் கடப்பது சாதனைக்குரிய செயலாகக் கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழகத்தின் இளம் நீச்சல் வீரன் குற்றாலீசுவரன் தனியாக 32 கி.மீட்டரை 16 மணி நேரத்தில் நீந்திக் கடந்து புதிய சாதனை நிகழ்த்தினான்.

27.3.95 அன்று இந்த பாக்ஜலசந்தியை அருண்பாலாஜி, சிறுமி சவ்வி, மற்றும் சிறுமி ரூபாலி மூவரும் கடந்தனர்.

### அருண்பாலாஜி

அருண்பாலாஜி (வயது $8^1/_2$) சென்னை திருவல்லிக்கேணியைச் சேர்ந்தவன். தந்தை பெயர் ஜெயபாலன். தாயார் பூங்கோதை, அருண்பாலாஜி செட்டிநாடு வித்யாசிரமம் பள்ளிக்கூடத்தில் 4-ஆம் வகுப்பு படித்துவருகிறான். அருண்பாலாஜி $5\ ^1/_2$ வயதில் முதலில் லிம்கா சாதனைக்காக, 5 ஆயிரத்து 600 மீட்டர் நீந்தி இருக்கிறான். தங்கக் கடற்கரையில் இருந்து சீரணி அரங்கம் கடற்கரை வரை 20 கி.மீட்டர் தூரத்தை ஆறரை மணி நேரத்தில் நீந்திக் கடந்துள்ளான்.

### சிறுமி சவ்வி

சிறுமி சவ்வி (வயது $11\ ^1/_2$) கல்கத்தாவைச் சேர்ந்தவள். 7ஆம் வகுப்பு மாணவி, தந்தை பெயர் மதான். தாயார் பெயர் மாலி. சிறுமி சவ்வி அந்தமான் நீலித்தீவில் 34 கி.மீட்டர் துரத்தை 11.52 மணி நேரத்தில் நீந்திக் கடந்தவள்.

### சிறுமி ரூபாலி

ரூபாலி (வயது 13) இவர் 8-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். தந்தை பெயர் ராமதாஸ். இவர் (ரூபாலி) இங்கிலிஷ் கால்வாயை 16.7 மணி நேரத்தில் (56 கி.மீட்டர்) 1994-ஆம் ஆண்டு கடந்தார். இந்தியாவில் 2-வது இளம் வீராங்கனை என்ற பட்டம் பெற்றவர்.

பாக்ஜலசந்தியை நீந்தி 27.3.95 அன்று மாலை 5 மணியளவில், அருண்பாலாஜி, சவ்வி, ரூபாலி,




சரவணவடிவு மற்றும் சந்துரு ஆகிய 5 பேர் கொண்ட குழு நள்ளிரவு 12 மணிக்கு தலைமன்னார் கடலிலிருந்து குதித்தனர்.

தலைமன்னார் பழைய கலங்கரை விளக்கத்தில் இருந்து போட்டி ஆரம்பித்தது. கப்பல் கேப்டன் பி.எஸ். ஜா, வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு போட்டியைத் தொடங்கி வைத்தார். வீரர்கள்-வீராங்கனைகள் கடலுக்குள் பாய்ந்து தனுஷ்கோடி நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பாக இருபுறமும் படகுகள் வந்தன. எந்திரத் துப்பாக்கி ஏந்திய கடற்படை வீரர்கள் அவற்றில் இருந்தனர். வீரர்களின் இரண்டு பக்கமும் பிரகாசத விளக்குகள் பொருத்திய படகுகளும், வீரர்களுக்கு பிரகாசத விளக்கு பொருத்திய பைலட் படகும், வீரர்களுக்குப் பின்னால் மற்றொரு படகும் சென்றன. மேலும் இந்தியக் கடற்படை ஹெலிகாப்டரும் வானில் பறந்து பாதுகாப்பு அளித்தது. இவர்கள் அனைவரும் மின்னல் வேகத்தில் தனுஷ்கோடியை நோக்கி நீந்தினார்கள். ஆனால், அவர்களில் அருண்பாலாஜி துடிப்போடு நீந்தினான். ஆரம்பம் முதல் அருண்பாலாஜியே முன்னிலையில் இருந்தான்.

நீச்சல் போட்டியில் இதுவரை எந்தப் போட்டியாளரும் காட்டியிராத வேகத்தில் அருணபாலாஜி நீந்தினான். கடலில் பொங்கி எழுந்த அலைகளையும் சமாளித்து அவன் முன்னேறினான்.

நள்ளிரவு 12 மணிக்குத் தொடங்கி, மறுநாள் காலை 10.30 மணியளவில் அருண்பாலாஜி தனுஷ்கோடியில் கரையேறினான்.



**மனித சமுதாயத்தில் மனக் கவலை ஏற்படுவதற்கு முதல் காரணம், சமதர்மம் சமத்துவம் இல்லாத தன்மையோயாகும். அதாவது பேதநிலை வாழ்வே யாகும்.**

**அறிவும், அனுபவமும், அவற்றை ஒட்டிய சிந்தனையும் ஏற்படாதவரையில், மனித இனம் கவலையற்ற வாழ்வை அடைய முடியாது என்பது திண்ணம்.**

11 மணியளவில் சவ்வியும், 11.30 மணியளவில் ரூபாலியும் கரைக்கு வந்தனர். மேலும் இவர்களது பாதுகாப்புக்காக நீந்திய சரவணவடிவு அனைவரின் சாதனையை முறியடிக்கும் வகையில் 10.15 மணிக்கே கரையை அடைந்தார்.

அருண்பாலாஜி நீந்திக் கடந்த 10.30 மணி நேரமும் உலகச் சாதனையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. 8 வயதிற்குள் விரைவாக 32 கி.மீட்டர் தூரத்தை உலகிலேயே யாருமே நீந்திக் கடக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் அருண்பாலாஜி உலகச் சாதனை புரிந்தவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

தமிழ்நாடு டிரையாத்லிக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இவர்கள் அனைவருக்கும் அன்று மாலை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. மாவட்ட ஆட்சியர் திரு இல. கிருட்டிணன், இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அருண்பாலாஜி, சவ்வி, ரூபாலி, சரவணவடிவு ஆகியோருக்கு மாவட்ட ஆட்சியர் பொன்னாடை போர்த்தி வலம்புரிச் சங்குகளைப் பரிசாக வழங்கிப் பேசும்போது, "இராமேஸ்வரம் மண்ணுக்கு அருண்பாலாஜி போன்ற சாதனை வீரர்களால் பெருமை சேர்க்கப்பட்டு உள்ளது. உலகச் சாதனை புரிந்த அருண்பாலாஜிக்குத் தேவையான உதவிகளைத் தமிழக அரசு செய்யும். மேலும் விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து, பல்வேறு விதமான உதவிகளையும் செய்ய அரசு காத்திருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சி வெற்றிகரமாக அமைந்திட தமிழ்நாடு டிரையாத்லிக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தன.

**துரை. ராஜ்குமார்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**இராமநாதபுரம்.**




# கோவையில் மகளிர் மேம்பாடு

கோயம்புத்தூர் மாவட்டத்து மக்கள் பெரிதும் உழைப்பையே நம்பியிருக்கிறார்கள்; ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் ஏதாவதொரு தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு உழைப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் பல பெண்கள் மசாலா பவுடர், கிடுகு தயாரித்தல், சுண்ணாம்புக் காளவாய் போடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

காரமடையில் உள்ள நரிக்குறவர் நலச் சங்கப் பெண்மணிகள் பச்சைமணி, பாசி மணி, பவழம் கோத்து விற்கும் பணியில் தீவிரம் காட்டிவருகின்றனர்.

குறிச்சி பேரூரில் உள்ள பெண்மணிகள் ஒன்று சேர்ந்து பலவகையான வண்ணப் பொம்மைகள் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். அங்கேயே, செல்வி கே. பேபி என்பார் தலைமையில் சில இளம் பெண்கள் ஒன்றுகூடி பைண்டிங், அரசுப் பயனுக்கான விண்ணப்ப மனுக்கள் தயாரித்தல், ரூலிங், நோட்டுப் புத்தகம் தயாரிப்பு என அச்சகத் தொழிலை அழகுற மேற்கொண்டிருக்கிறார்கள்.



'டோக்ரா' திட்டத்தின்மூலம் நிதியுதவி பெற்று, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திம்மநாயக்கன்பாளையம் கிராமப் பெண்கள் புடவை நெசவு செய்து வருகிறார்கள்.

With best compliments

*for Excellence in Engineering Education*

**KARUNYA INSTITUTE OF TECHNOLOGY**

**KARUNYA NAGAR, COIMBATORE 641 114.**

**(Telephone 851608/851618)**

(Approved by Government of Tamil Nadu, Recognised by the All India Council for Technical Education, New Delhi andaffiliated to Bharathiar University, Coimbatore)

**Founders: Dr. D.G.S. DHINAKARAN, Ph.D.,**
**Dr. PAUL DHINAKARAN, Ph.D.,**

(Totally residential for both boys and girls)

**HIGHLIGHTS OF THE COLLEGE**

1. Academic Instruction & Excellent Results
2. Stress on Discipline & Character Building
3. Situated amidst scenic beauty, surrounded by enchanting mountains & fresh air.
4. Modern hostel facilities for all students.
5. Availability of excellent Play grounds & modern gymnasiums
6. Availability of Bank, Post Office & Hospital

**COURSES OFFERED**

I. B.E. Degree Course (4 years) in
a) Mechanical Engineering
b) Electronics & Communication Engineering
c) Civil Engineering
d) Electrical & Electronics Engineering
e) Computer Science & Engineering

II Post Graduate Courses in
1. Business Administration (M.B.A.)
2. Computer Applications (M.C.A.)

நல்வாழ்த்துக்கள்

# ஸ்ரீ செந்தில் இன்ஜினியரிங் இண்டஸ்டிரீஸ்

ஏ.12 கோவை இண்டஸ்டிரியல் எஸ்டேட்
இண்டஸ்டிரியல் எஸ்டேட் அஞ்சல்,
கோவை 21.

# நமது பண்பாடு

## பாவலர் பாலசுந்தரம் அவர்கள்

நான் தஞ்சையில் பிறந்ததற்காக இன்றைக்கு மகிழ்ச்சியடைகிறேன். அதுமட்டுமல்ல, தஞ்சையில் பிறந்து இதுவரையில் வாழ்வதற்காகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏனென்றால், இராஜராஜன் வாழ்கின்ற காலத்திலே ஒரு பெரிய கோயிலைக் கட்டினான். அவன் எடுக்காத விழா இல்லை. ஆனால், அன்றைக்கு இந்தக் கோயிலோடு அந்த விழாக்களைக் காணுகின்ற பேறு எனக்குக் கிடைக்கவில்லை. இன்றைக்கு அதே இராஜராஜ அருள்மொழித் தேவன் ஒரு பெண் உருவத்திலே இந்தத் தஞ்சையில் இந்த மாநாட்டை- உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி என்னைக் காண வைத்திருக்கிறான். அதற்காக நான் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி செலுத்துகிறேன். அவர்கள் பன்மொழிகளில் வித்தகர். பல கலைகளை அறிந்தவர். எனவே கலைமகள் என்று சொல்லுவதிலே தவறு இல்லை. சிறந்த கலைமகளாகவும், தமிழகத்தின் சிறந்த தலைமகளாகவும் அவர்கள் வீற்றிருக்கிறார்கள். அவர்களுடைய அருட்கண்ணோட்டத்திடையே இந்த விழா சிறப்பாக நடைபெறுவது மட்டுமல்ல, நாமெல்லாம் எதிர்பார்க்கின்ற இந்தத் தமிழுக்குரிய ஏற்றம் எல்லாம் இந்தக் காலத்திலே, இப்போதே, இன்றே நிகழும் என்று நான் எண்ணுகின்றேன். அதையே எதிர்பார்க்கின்றேன்.

அடுத்து, தொல்காப்பியர் வாழ்வியல், தொல்காப்பியர் காலத்து வாழ்வியல் என்பது எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு. வாழ்வியல் என்பது அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் ஒன்றும் மாறுபடவில்லை. ஏனென்றால் உடுக்கின்றோம், உண்ணுகின்றோம். கணவன் மனைவியாக வாழ்கின்றோம், அரசு அமைந்திருக்கிறது, ஆட்சி நடைபெறுகிறது, படைகள் இருக்கின்றன. காவலர்கள் இருக்கிறார்கள், விருந்தினர்கள் வருகின்றார்கள். இந்த நிகழ்ச்சிகள் இரண்டாயிரம், ஏன் மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தேகூட ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆனால், ஒரே ஒரு வேறுபாடு, அன்றைக்கு முடியாட்சி இருந்தது. இன்றைக்கு மக்களாட்சி நிகழ்கின்றது. இந்த வேறுபாட்டிலே எவ்வளவு தூரம் மக்கள் நாகரீகம் அடைந்திருக்கிறார்கள் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும்.

அன்றைக்கு அரசனுடைய கட்டளையை ஏற்று எல்லாம் நிகழ்த்தப்பட்டன. இன்றைக்கு மக்களுடைய கட்டளையாலே எல்லாம் நிகழ்கின்றன. அன்றைக்கு வாழ்வை அகம், புறம் என்று இரண்டாகப் பிரித்து ஆசிரியர்கள் பேசினார்கள். அக வாழ்க்கை என்பது கணவனும் மனைவியுமாக மக்களைப் பெற்று, விருந்தோம்பி வாழ்வது. அது இன்றைக்கும் நடைபெறுகிறது. ஆனால், அன்றைய தினம் உடுத்தியிருந்த உடை இன்று மாறுபட்டிருக்கலாம். உண்ணுகின்ற உணவு வேறுபட்டிருக்கலாம். ஆனாலும் உணர்ச்சிகள் வேறுபடவில்லை. பசியிலே வேறுபாடில்லை; காதலிலே வேறுபாடில்லை; இன்னும் மற்ற மனிதப் பண்பாட்டிலே எந்த வேறுபாடும் இல்லை.

தொல்காப்பியர் காலத்து மக்கள் சிறந்த வீரர்களாக இருந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் சொன்னார்கள். காரணம், இன்றைக்கு மக்களாட்சியிலே இராணுவம் தனி ஒரு பகுதியாக இருக்கிறது. அன்றைக்கு முடியாட்சியிலே இராணுவத்தினராக மக்களே இருந்தார்கள். எனவே, நிலைப்படையாக இருந்த ஒரு பகுதியைத் தவிர, பிற நாடுகளோடு போர் நிகழ வேண்டுமென்றால், அந்தக் குடிமக்கள் அத்தனைப்பேரும் வீரர்களாகச் சென்றார்கள். அவர்களை வீரர்களாகத் தயாரித்தவர்கள் அவர்களுடைய பெற்றோர்கள்.

அந்த வீரன் போர்க்களத்திலே வெற்றி பெற்றான் என்றால், மகிழ்வாள் அவன் தாய். அவன் தோல்வியுற்றான் என்றால், எப்படித் தோல்வியுற்றான் என்று கேட்டு அதிலே இழுக்கு நேருமானால், தன்னுடைய மார்பையே அறுத்துக் கொள்வேன் என்று சொல்லுகின்ற அந்த அளவுக்கு வீரம் பொருந்திய தாய்மார்கள் இருந்தனர்.

வாழ்க்கையிலே ஒரே ஒரு சின்ன செய்தியை மட்டும்தான் தமிழ் அறிஞர்கள் ஒரு குறையாகச் சொல்லுகிறார்கள்; தமிழனுடைய வாழ்விலே ஒரு பரத்தையர் ஒழுக்கம் என்று ஒன்று இருந்தது என்று. அது எவ்வளவு பெரிய அறியாமை என்று நான் சொல்லவில்லை. அதை விளக்க நேரமாகும். தொல்காப்பியர் காலத்திலே, உலகத்தின் மற்றைய நாடுகளின் மற்றைய மக்கள் எப்படி ஆணும் பெண்ணுமாக வாழ்ந்தார்கள் என்பதைச் சரித்திரப் பூர்வமாக எண்ணிப்பார்த்தால், தமிழகத்தில் பரத்தையர் வாழ்வு என்பது எப்படி பண்பாட்டிலும், நாகரீகத்திலும் சிறந்தது என்பது விளங்கும்.

அரசன் என்று சொன்னால் அமைச்சன் உண்டு. அரசு என்று சொன்னால் படை உண்டு. படை என்று சொன்னால் நாற்படைகள் உண்டு. யான்னைப் படையை எடுத்துக் கொள்வோம், குதிரைப் படையை எடுத்துக்கொள்வோம், குதிரைக்கு, சேணம் போடுகின்ற ஆளும் இருப்பார்கள். அதற்குத் தீனி கொடுக்கும் உழவர்களும் இருப்பார்கள். வணிகர்கள் இருப்பார்கள். மனித வாழ்க்கையிலே ஏற்றத்தாழ்வு என்பது என்றைக்கும் நிலையானது. ஆனால், அன்றைககு அவர்கள் எல்லோரும் பசியாற உண்டார்கள். எல்லோரும் உறையுள் பெற்றிருந்தார்கள், எல்லோரும் நன்கு உடுத்தினார்கள் என்ற வேறுபாடுதான் அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் உள்ள சிறிய வேறுபாடாகும்.

அன்றைக்குத் தனி முதலாளித்துவம் எதுவுமே ஏழைகளைச் சுரண்டவில்லை. அன்றைக்கு அவர்களே ஏழைகளாகவும் இருந்தார்கள், அவர்களே பணக்காரர்களாகவும் இருந்தார்கள். அரசனைப் பாடிய பெரும் புலவர்கள், யானை, தேர் முதலிய பெரும் செல்வங்களைப் பெற்றார்கள். ஆனால், அடுத்த கிழமையே அவர்கள் வறுமையாளர்களாக இருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் ஈத்துவக்கும் பண்பை, பகுத்துண்ணும் பண்பை அந்தக் காலத்திலே பெற்றிருந்தார்கள்.

எனவே, பரத்தையர் ஒழுக்கம் என்பது, ஒரு நாட்டிலே கலைகள் வளர வேண்டுமானால், இசை வளரவேண்டுமானால், நாடகம் முதலிய கலைகள் வளர வேண்டுமானால் அதற்கு என்று ஒரு பொறுப்பாளர்கள் அவசியம் இருக்க வேண்டும். எனவே, அவர்களைக் காப்பது அரசனுடைய கடமை. எனவே அரசருடைய அந்தக் கடமையிலே ஒரு பகுதி பரத்தையர் பிரிவு. அது எல்லோருக்கும் வாய்த்ததல்ல. எனக்கும், சாதாரண மனிதர்களுக்கும் அல்ல அது. அரசு கட்டிலிலே வீற்றிருக்கும் அவர்கள் எல்லோரையும் காக்க வேண்டியது, கலைகளைக் காக்க வேண்டியது என்ற ஒரு பொறுப்பினாலே அந்தக் கலைஞர்களைப் பேணினார்கள். அதனை ஊடல் உவகையாகப் பாடுவதற்குத்தான் பரத்தையர் பிரிவு என்பதை வைத்து அங்கே ஊடலும் கூடலும் புலவிநுணுக்கம் உண்டு என்பதற்காக, இந்தத் தொல்காப்பிய ஆசிரியர் அந்தப் பரத்தையர் குறித்து சொல்லுகின்றார். அதை மரபு என ஏற்றுப் பார்க்கும்போது, அந்தக் காலத்திலும் நான்கு பிரிவுகள் இருந்தன. உயர்ந்தோர் இருந்தார்கள். தாழ்ந்தோர் இருந்தார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் மக்களாகவே மதிக்கப்பட்டார்கள். அவர்களுடைய தொழில் காரணமாகவே இந்த வேறுபாடு. பின்னர்தான் அது பிறப்பு வேறுபாடாக மாறியது. பிறப்பு வேறுபாடாக மாறிய பின்னர்தான் ஒரு சாரார் அழுத்தப்படுவதற்கும், ஒரு சாரார் உயர்வதற்கும், வஞ்சகர்கள் உயர்வதற்கும், இப்படியெல்லாம் பல்வேறு சூதுகள் வந்தன.

அன்று சூது இல்லை, வஞ்சம் இல்லை. அவரவர்கள் உழைத்தார்கள், வாழ்ந்தார்கள். அந்த வாழ்க்கையை, மன நிறைவான வாழ்க்கையை நாம் மீண்டும் பெறவேண்டும். தற்போதைய நாகரீக வாழ்க்கை நமக்குத் தேவை. அறிவியலில் கிண்டக்கின்ற அத்தனை அற்புதங்களையும் நாம் அனுபவிக்க வேண்டும். ஆனால், நம்முடைய பண்பாட்டிலே, தொல்காப்பியர் காலத்தில் இருந்த பண்பாடு மீண்டும் பிறக்க வேண்டும்.

**(உலகத் தமிழ் மாநாட்டில், 2.1.95 அன்று நடந்த கருத்தரங்கில், 'தொல்காப்பியத்தில் வாழ்வியல் நெறி' என்ற தலைப்பில் ஆற்றிய உரையிலிருந்து).**



# வளம் மிகுந்த வால்பாறை!

சிறந்த சுற்றுலாத் தலமாக மாறிவரும் வால்பாறையில் தான் மற்ற மலைப்பிரதேசங் களைவிட தேயிலைப் பயிர்ச் செலவு அதிகம். 40 கொண்டை ஊசி வளைவுகள் உள்ள இம் மலையில் உள்ள 'குரங்கருவி' பார்த்து மகிழவேண்டிய ஒன்று!

வால்பாறை நகரியத்தில் உள்ள எம்.ஜி.ஆர் நகரில் ரூ.20 ஆயிரத்தில் அண்மையில் மலைச்சரிவு பாதுகாப்புச் சுவர் ஒன்று கட்டியுள்ளனர். 560 மீட்டர் நீளக் 'கம்முகுட்டி ரோடும்' 4 கிலோமீட்டர் நீளச் 'சிதம்பரனார் ரோடும்' போட்டி ருக்கிறார்கள்.

சென்ற ஆண்டில் இங்கே ஒரு பேருந்து நிலையம் ரூ.6.72 இலட்சம் செலவில் அமைத் துள்ளனர். சுற்றுலா மாளிகை, சமூக நலக் கூடமெல்லாம் கட்டும் பணி மிக வேகமாக நடைபெற்று வருகிறது. கோடை விழா தொடர்ந்து இங்கே நடத்தப்பெற அரசு அனுமதிக் காகக் காத்திருக்கிறார்கள்.


இப்போதே நகரின் முக் கியச் சாலையிலெல்லாம் ஒயி லாட்டம், மயிலாட்டம் போன்ற வற்றால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்விக்கப்படுதை நாம் கண் டோம்.

ஊருக்கு வெளியே, மலைப் பாதை ஓரத்தில் ரூ.45,000 செலவில், பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ், ஒரு சுடுகாடு கட்டடம் கட்டப்படுகிறது.

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ், ஒரு மாருதி கார் முதல் பரிசாக அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததே? அது இந்த வால்பாறை நகரியத்திற் குத்தான் கிடைத்திருக்கிறது!

இங்குள்ள கரிமலை எஸ் டேட்டில், பாலாஜி கோயி லொன்று தனியாரால், கட்டப் பட்டுள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இடத்தில் அமைந் துள்ள இக்கோயிலுக்கு மக்கள் சாரிசாரியாக வந்தவண்ண மிருக்கின்றனர்.

வால்பாறை மலைச் சிகரத்தை -அங்கே தேயிலை பயிராவதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை இருப் பதை முதலில் கண்டுபிடித் தாராம் கார்வர் மார்ஷல்ஸ் துரை என்பார்; அவருடைய சிலை கம்பீரமாக நிற்பதை ஓரிடத்தில் நாம் காணமுடிந் தது!



WITH BEST COMPLIMENTS FROM

# ○ *Srinivas Theatre*

# ○ *Shanthi Theatre*

# ○ *Sivam Theatre*

Tiruppur



# அரிய கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பு

**த**மிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இரு அரிய கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்துள்ளது. இவற்றில் ஒன்று திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், வெண்மந்தை என்ற ஊரில் இருந்து படியெடுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர் திரு.மு.இராஜமாணிக்கம் இக்கல்வெட்டை அறிந்து இத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

மதுரை கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டைய முதலாம் பராந்தகச் சோழனின் 33-ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி.940-ல் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு வெங்கால நாட்டுக் கருவூரைச் சேர்ந்த கருவூர் தலைமகன் கசுவரன் என்பவன் வெண்குன்றக் கோட்டத்து வாதவூர் நாட்டு வெண்பழந்தை என்ற ஊரில் ஏரிப்பட்டி நிலம் கொடுத்து அதற்கு ஒரு தூம்பும் (மடை) அமைத்திருக்கின்றான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது. வெண்மத்தை என்று அழைக்கப்படும் இவ்வூரின் பழைய பெயர் வெண்பழந்தை என்பது இக்கல்வெட்டின் மூலம் தெரிகிறது.

சோழர் வரலாற்றில் ஆதித்தசோழன் தன்னாட்சியின் கீழ் கொங்கு, சேர நாடுகளை முதலில் கொண்டு வந்தான் என்று கூறபபடுகிறது. இவனது மகன் பராந்தகச் சோழன் கொங்கு நாட்டிலிருந்து கொண்டு வந்த தங்கத்தைக் கொண்டு சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலின் விமானத்தைப் பொன்வேய்ந்தான். கொங்கு மற்றும் சேரநாட்டுச் சிற்றரசுகளும் தலைவர்களும் பராந்தகச் சோழனுடன் நல்லுறவு கொண்டிருந்ததின் காரணமாக வெகு தொலைவிலுள்ள தொண்டை நாட்டினும் ஏரிகள் வெட்டிப் பாசன வசதிகள் செய்வதற்குக் கொடையளித்திருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

இரண்டாம் கல்வெட்டு திருச்சி மலைக்கோட்டை கோயில் வடபகுதியில் பாறையில் காணப்படுகிறது. மலைக்கோட்டைக் கோயில் நிர்வாக அலுவலர் திரு.முருகேசன் தந்த தகவலின்படி இத்துறை திருச்சிப் பதிவு அலுவலர் திரு.தரன் இத்துறை இயக்குநரின் கவனத்திற்கு இக்கல்வெட்டைக் கொண்டு வந்தார். இக்கல்வெட்டு எழுத்தமைதியைக் கொண்டு கி.பி. 14 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இது எனலாம்.

ஒரு முனிவர் சித்தி அடைய வேண்டும் என்பதற்காக ஒரு நிலவறையிலுள் நுழைந்திருக்கிறார். அப்பொழுது தன் சீடர்களிடம் தான் மண் மீதோ அல்லது பொன் மீதோ ஆசை கொண்டு செல்லவில்லை, சிததியடையவே செல்கின்றேன். எனவே எக்காரணத்தைக் கொண்டும் இதனைத் திறக்கக்கூடாது என்று கூறுவது போல் கல்வெட்டுள்ளது. கல்வெட்டின் அருகில் இரு திருவடிகளும் ஒரு முனிவரது உருவமும் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. இது போன்ற செய்தி தரும் கல்வெட்டுக்கள் இதுவரை தமிழ் நாட்டில் அறியப்படவில்லை. ஆதலால் இது ஒரு சிறப்பாகப் புதிய செய்தி தரும் கல்வெட்டாகும்.

**த**ன்னையே தான் உணர வேண்டுமாயின், நித்திரைக்குச் செல்லும் முன்பாக அன்றைய தினம், தான் புரிந்த நல்லவை மற்றும் தீயவை ஆகியவற்றை நினைத்துப் பார்ப்பது அவசியம். அறிந்து செய்தவற்றையும் அறியாது செய்தவற்றையும் கருதிப் பார்க்க வேண்டும். இதனால் தன்னையே உணர்ந்து கொள்ள அவனுக்கு முடியும்.

—சாக்ரடீஸ்




## ஸ்டேன்ஸ் கம்பெனியின் ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறையின் அருஞ்செயல்கள் இப்போது தேசிய அங்கீகாரம் பெற்றுள்ளன.

T.ஸ்டேன்ஸ் கம்பெனியின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் அரிய சேவையை அங்கீகாரம் செய்து, விஞ்ஞானம் மற்றும் தொழில்வள ஆராய்ச்சித் துறையினர் (DSIR) தேசீய விருது வழங்கியுள்ளனர்.

உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டே முற்றிலும் தங்கள் சொந்த முயற்சியால் வேம்பை ஆதாரமாகக் கொண்டு 'நிம்பிசிடின்' பூச்சிக்கொல்லியைத் தயாரித்ததற்காக, ஸ்டேன்ஸின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக் குழுவினரின் சாதனைக்குப் பாராட்டாகவே இந்த விருது கிடைத்துள்ளது.

மூலிகைச் சத்துக்கள் அடங்கியுள்ள நிம்பிசிடின் பூச்சிக்கொல்லி மற்ற உயிரினங்களை உண்டு வாழும் பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு தருவது மட்டுமின்றி, அது ஓர் உணவுத்தடை சக்தி எனவும், பூச்சிகளைத் துரத்தும் திறன் படைத்தது எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பயிர்ப்பூச்சி மேலாண்மை நடந்துவரும் இந்நாட்களில், தாவர இயல் பூச்சிக்கொல்லியாக வரும் 'நிம்பிசிடின்' நச்சுத்தன்மை இல்லாதது; சுற்றுச்சூழலுக்கு நேயமானது.

'நிம்பிசிடின்' பூச்சிக்கொல்லிக்கு தேசீய விருதைப் பெற்ற ஊக்கத்தில், ஸ்டேன்ஸ் கம்பெனி தூய்மைக்கேடு இல்லாத சுற்றுச்சூழலுக்காக தொடர்ந்து பணியாற்றும்.

Stanes

**T.ஸ்டேன்ஸ் & கம்பெனி லிட்**

8/23-24, ரேஸ் கோர்ஸ் சாலை, கோயம்புத்தூர் - 641 018.

# தமிழ் நிலை பெற வேண்டும்!

## டத்தோ ஜி. வடிவேலு அவர்கள்

**பேரவைத் தலைவர், மலேசிய செனட்,**
**பொதுச் செயலாளர், மலேசிய இந்தியன் காங்கிரஸ்**

'**எ**ங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்ற தமிழ் முழக்கத்தோடு உலகத் தமிழர்கள் புத்தாண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறீர்கள். இந்தப் புத்தாண்டு தமிழ்த் தாய்க்கு அணி செய்து அழகு பார்க்கும் புத்தாண்டு. ஜனவரி முதல்நாள் தமிழுக்கு ஒரு ஆராதனை என்ற பெயரில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி சாதனை படைத்து கோலாகலமாக மலர்ந்து இருப்பது கண்டு எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுவதை இங்கே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அந்த இரட்டிப்பு மகிழ்ச்சிக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, ஜனவரி முதல் நாள் தமிழ்த் தாய்க்கு முடிசூட்டும் மகத்தான நாள்— அது ஒன்று. இரண்டு, அந்த நாள் எனது பிறந்த நாள். தமிழ் அன்னையை உலகமே சீராட்டிப்பாராட்டும் ஒரு பொன்னாள், எனக்குப் பிறந்த நாளாக அமைந்திருப்பதை நான் பெற்ற பேறாகக் கருதுகின்றேன். இதில் இன்னொரு சிறப்பு அடங்கி இருப்பதையும் இங்கே நான் சொல்வது பொருத்தம் என்று நினைக்கின்றேன். தமிழ்ப் பரணி பாடும் தஞ்சைத் தரணி என் பெற்றோர்கள் பிறந்த மண். எனது தந்தை பிறந்தது பட்டுக்கோட்டையின் அருகாமையிலுள்ள பொன்னவராயன் கோட்டை என்ற ஒரு கிராமம். என் தாய் பிறந்தது மன்னார்குடி அருகாமையிலுள்ள பரவாக்கோட்டை என்ற ஒரு கிராமம். என் பெற்றோர் பிறந்த மண்ணில், நான் பிறந்த தேதியில் தமிழுக்கு ஒரு திருவிழா எடுப்பதும், இந்த விழாவில் என்னைப் பேச அழைப்பதும் மறக்க முடியாத நிகழ்வாகவும், நினைவாகவும் அமைந்து விட்டது. இதை நான் செய்த பெரும்பேறு என்றே நான் கருதுகின்றேன்.

நாங்கள் இங்கே வந்திருக்கும் நோக்கங்களில் முக்கியமான நோக்கம் ஒன்று என்னவெனில், தமிழையும் தமிழர்களையும் பிரிக்க முடியாது என்று எங்களுடைய அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதன் நோக்கம் என்னவென்றால், அங்குள்ள தமிழ் வளர்ச்சிக்கு எந்த பாதகமும் இல்லாமல் அரசு தொடர்ந்து தமிழ்ப் பள்ளிக்கூடங்களையும் பாதுகாக்க வேண்டுமென்பதே எங்களுடைய குறிக்கோள். ஆகவே, எங்கெல்லாம் தமிழ் மாநாடுகள் நடக்கின்றதோ அங்கெல்லாம் நாங்கள் கண்டிப்பாகப் போவோம் என்றே இந்த இடத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே ஆட்சி மொழி என்ற பொருளில் இந்த அரங்கம் நடைபெறுகிறது. நான் மலேசிய நாட்டின் நாடாளுமன்ற மேலவையின் சபாநாயகர் என்ற முறையில் நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு மதிப்பு அளித்துச் செயல்படும் நிலையில் இருப்பதால், ஆட்சிமொழி பற்றி விரிவாகப் பேசும் வாய்ப்பு இல்லை. ஆயினும், மகாநாடு எனக்கு வழங்கியுள்ள இந்த மரியாதையின் காரணமாகப் பொதுவான சில கருத்துக்களை மட்டும் இங்கே உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

இந்தியர், சீனர், மலாய்காரர்கள் ஆகிய பிரதான சமு

கங்கள் வாழும் எங்கள் மலேசிய நாட்டில், மலாய் மொழிதான் ஆட்சிமொழியாக அமைந்து இருக்கிறது. தமிழ் மொழிக்கும், சீன மொழிக்கும் எல்லாத்துறைகளிலும் அங்கீகாரம் அளிகக்பட்டு இருந்தாலும், அரசாங்கச் சேவைகளில் அனைத்திலும் மலாய் மொழியே ஆட்சி செய்கிறது. அரசுக்கு ஆங்கிலத்தில் எழுதப்படும் கடிதங்கள் "சீல குணக்கன் பாஷா" என்ற முத்திரையுடன் திரும்பி வருவது உண்டு. "சீல குணக்கன் பாஷா" என்றால், தயவு செய்து மலாய் மொழியைப் பயன்படுத்துங்கள் என்று பொருள். மலாய் மொழி பயன்படுத்தப்படாத கடிதங்களுக்கு அங்கீகாரம் கிடைப்பது கிடையாது.

மலேசியாவில் சுமார் 1 1/2 கோடி மக்களால் மட்டுமே பேசப்படும் மலாய் மொழியை ஆட்சிமொழியாகக் கொண்டுள்ள மலேசியா, இன்று உலக அரங்கில் அதிகம் உச்சரிக்கப்படும் நாடாகத் திகழ்கின்றது. இதை நான் இங்கே பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் நாட்டில், நீதி மன்றங்களிலும் மலாய் மொழி பயன்படுத்தப்பட்டு வருகிறது. வாதத் தொகுப்புகளும், தீர்ப்புகளும் மலாய் மொழியில்தான் இன்று வழங்கப்படுகின்றன. மலாய் மொழி நீதித் துறையிலும் பயன்படுத்தப்படுவதில், ஆரம்பத்தில் சில சிக்கல்கள் தோன்றினாலும் நாளடைவில் அது மலேசிய வழக்கறிஞர்களுக்குப் பழக்கப்பட்டு விட்டது. என்னைப் போன்ற வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களில் மலாய் மொழியில் வழக்காடுவதில் இப்போது பிரச்சினை

**வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவுவதே கலை!**

**வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவாமல், குறுக்கே நிற்பது எதுவானாலும், கலை முதலான எந்தப் பெயரால் வந்து நின்றாலும் அது அழிந்துபோகும்.** - டாக்டர் மு.வ

ஏதும் எதிர்நோக்கவில்லை. அதே போன்று செனட் சபையிலும், சட்டமன்றத்திலும், ஊராட்சி மன்றங்களிலும், முழுமையாக மலாய் மொழியில்தான் நாங்கள் பேசவேண்டும் என்று அங்கே கட்டாயம் இருக்கிறது. ஆகவே, மலேசியா இன்றைக்குப் பல மொழிகளுக்குப் பின்னால் தோன்றிய மலாய் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் ஒரு விவசாய நாடாகத் தோன்றிய மலேசியா இன்றைக்குப் பிரமிப்பூட்டும் தொழில் துறை வளர்ச்சி கண்ட நாடாக உயர்ந்திருக்கிறது.

தமிழ் மொழியைவிட எத்தனையோ ஆண்டுகளுக்கு பிறகு தோன்றிய மலாய் மொழி, சுமார் 1 1/2 கோடி மக்களால் மட்டுமே பேசப்படுகின்ற மலாய் மொழி, ஆட்சி மொழியாக, வெற்றிகரமாகச் செயல்படும்போது உலகமெல்லாம் ஓசை எழுப்புகின்ற தமிழ் மொழி, ஆட்சிமொழியாக அரியாசனம் காண்பதில் என்ன தடை இருக்க முடியும். பல மொழிகள் பேசும் மக்களைக் கொண்ட இந்தியரில் தேசிய ரீதியில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்க முடியுமா என்பது சிந்தனைக்குரிய ஒரு விஷயம். இதைப்பற்றி இங்கே கட்டுரை வழங்க வந்து இருக்கும் அறிஞர்கள் என்ன சொல்லப் போகின்றார்கள் என்று நானும் கேட்க ஆவலாய் இருக்கின்றேன்.

இங்கே ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு மொழி பேசப்படுகின்றது. ஆந்திராவில் தெலுங்கு, கேரளாவில் மலையாளம், கர்நாடகத்தில் கன்னடம் என்று அந்த மொழிகள் அமைந்து உள்ளன. இந்த நிலையில் தேசிய ஐக்கியத்திற்குத் தடைக்கல்லாக விளங்கும் சூழ்நிலை ஏற்படலாம் எனச் சிலர் நினைக்கலாம். ஆகவே, இந்தக் கேள்விக்கும் விடை அளிப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். ஆனால் ஒன்று மட்டும் இந்த இடத்தில் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தின் ஆதரவு இருந்தால் மட்டும் எந்த மொழியும் ஆட்சிமொழியாகப் பிரகாசிக்க முடியாது. முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அறிவியல் தமிழ் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறி இருக்கின்றார்கள். இதை நான் முழுமையாக ஆதரிக்கின்றேன். இந்தக் காலகட்டத்தில் அது பொருத்தமான ஒரு கருத்து என்று நான் நினைக்கின்றேன். அதே வேளையில் தமிழில் விஞ்ஞானம் இல்லை என்று சொல்ல முடியாது. காரணம் நான் ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது ஒரு புத்தகத்தைப் படித்தேன். அந்தப் புத்தகம், History of Mathematics by Smith. அதிலே, ஆங்கிலத்திலே அந்த ஆசிரியர் கூறுகின்றார் 'The Greatest single contribution to mankind was India's discovery of Zero,

நல்லதொரு இலக்கியம்...

உள்ளதை உள்ளவாறு கூறுதல் சிறந்த கலை அன்று, உயர்ந்தோர் மாட்டு நிகழ்வதனை எல்லார்க்கும் பொதுவாக்கிக் கூறுவதே நல்ல இலக்கியமாகும்.

—டாக்டர் மு.வ

Otherwise, science could not have advanced to the same level, it has attained today'' அந்தக் கால கட்டம் பாஸ்கல் போன்ற கணித மேதைகள் இருந்தகாலம். ஆகவே, தமிழில் இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு அன்றே வித்திட்டவர்கள் தமிழர்கள்தான்.

மலேசியாவில் மலாய் மொழியின் மேம்பாட்டைக் கண்காணிப்பதற்காக "தேவான் பகாசா டான்புஸ்தகா" என்ற அமைப்பை அரசாங்கம் அமைத்திருக்கிறது. மொழி சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களையும் இந்த அமைப்பே கவனித்துக் கொள்கிறது. இதேபோன்று அரசாங்க ரீதியில் தமிழுக்கு ஓர் அமைப்பு ஏற்பட வேண்டும். சற்றுமுன் தலைவர் கூறினார்கள், தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டது என்று. எங்கள் நாட்டில் அந்த அமைப்புக்கு முழு நிதியுதவி வழங்கி இந்த அளவுக்கு மலாய் மொழியை வளர்ச்சி அடையச் செய்து இருக்கின்றார்கள். சாதாரண நிலையில் இருந்த மலேசியா மொழியை இன்று அறிவியல் நூல்களும் வெளியிடப்படும் அளவுக்கு அந்த மொழி வியப்பூட்டும் பிரகாசம் கண்டு இருப்பதற்கு, இந்த அமைப்பே காரணமாக விளங்குகிறது.

ஆகவே, தமிழுக்கும் அரசாங்க ரீதியில் ஓர் அமைப்பு தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும். அந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட வேண்டும். அதற்காகப் பொருள் உதவியும் வழங்கப்பட வேண்டும். சட்டரீதியில் அதற்கு ஆதரவையும் கொடுக்கவேண்டுமென்று நான் இந்த இடத்திலே வலியுறுத்த ஆசைப்படுகின்றேன்.

தமிழ் ஆட்சிமொழியாக அரியாசனம் ஏறுவதற்கு எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. ஆனால், தமிழுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பது என்பது இங்கே கேள்வியாகும். 'தேவான் பாஷா டான் புஸ்தகா' போல் தமிழ் நாட்டிலும் அமைக்கப்பட்டால், தமிழ் மொழி ஆட்சிமொழியாக வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு எந்தத் தடையும் இருக்காது என்று நான் நினைக்கின்றேன்.

நாங்கள் ஆட்சியில் மலாய் மொழியைப் பயன்படுத்துகின்றோம். உலகத் தொடர்புக்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றோம். குடும்பக் கலாச்சாரத்தில் தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் பயன்படுத்துகின்றோம்.

மலேஷியர்களின் முன்னேற்றத்திற்கு மொழிகள் தடையாக இருந்ததில்லை. ஆங்கிலம் இல்லாமல் ஆட்சி நடத்தமுடியும் என்பதற்கு எங்கள் நாடு ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்று நான் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தமிழ் மொழி வெவ்வேறு தொனிகளில் பேசப்படுகிறது. இது சீரமைக்கப்பட வேண்டும். தமிழ் மொழி எல்லோரும் ஒரேமாதிரி பயன்படுத்தப்படுகின்ற சீரான மொழியாக ஆக்கப்பட வேண்டும். தமிழகத்தில் அனைவரும் போற்றிப் புகழும் வண்ணம் புரட்சிகரமாக ஆட்சி செய்யும் வல்லமை பெற்ற முதல்வர் டாக்டர் ஜெயலலிதா அவர்கள், தமிழுக்கு ஒரு நிரந்தர அமைப்பை ஏற்படுத்தி தமிழ் மொழியில் உள்ள குறைபாடுகளைக் களைவதற்கு உதவுவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

தமிழர்கள் வீரம் செறிந்தவர்கள், விவேகம் நிறைந்தவர்கள். ஆட்சிமொழியாக உலகில் காண்பதற்கு எல்லாத் தகுதிகளும் தமிழுக்கு உண்டு. தமிழுக்குப் பிறகு தோன்றிய சிறு மொழியும் கூட ஆட்சிமொழியாக இருக்கும் போது, தொன்மையும் பழமையும் வாய்ந்த தமிழ் மொழி ஏன் ஆட்சிமொழியாக வர முடியாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

கடைசியாக ஒரு கருத்தை மட்டும், நான், தலைவர் பேசிய ஒரு கருத்தைத் தொட்டுப் பேசலாம் என்று நினைக்கின்றேன். இந்த நாட்டில் இரட்டை மொழிக் கொள்கை என்று கூறி இருக்கின்றார்கள். ஆகவே, அரசாங்கம் எந்த முயற்சி செய்தாலும்கூட, ஆங்கில மோகம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது என்று சொன்னார்கள். ஆனால், இந்த இடத்திலே ஒன்று சொல்ல ஆசைப்படுகின்றேன்.

நான் முறையாகததமிழ் படித்தவன் அல்ல. இரண்டு ஆண்டுகள் மட்டும் தமிழ்ப் பள்ளிக்குச் சென்றவன். அதற்குப் பிறகு எல்லாம்

ஆங்கிலம்தான். இன்றைக்கு வெளிநாட்டில் சட்டக் கல்வியும் பயின்று ஒரு பாரிஸ்டராக 25 ஆண்டுக் காலம் தொழில் செய்திருக்கிறேன். ஆனாலும், எங்கள் நாட்டில் ஆங்கிலம் கற்றவர்கள் இன்றைக்குத் தமிழ் மொழியும் கற்க வேண்டும் என்ற வேட்கை கொண்டு, தமிழை அவர்களாகவே பயின்று வருகின்றார்கள். என்னுடைய மகனும் ஆங்கிலப் பள்ளிக் கூடத்திற்குச் சென்று, பிறகுதான் நான் தமிழ் மொழி கற்கவேண்டும் என்ற எண்ணத்தைக்கூற, நான் அதற்காக ஒரு தமிழ் ஆசிரியரை வேலைக்கு அமர்த்தி அவனுக்கும் தமிழ் கற்றுக் கொடுத்தேன். ஆகவே, மனமாற்றம் இருந்தால் நாம் வெற்றிகரமாக எந்தவொரு குறிக்கோளையும் அடைய முடியும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்தி, தமிழ் நிலைபெற வேண்டுமென்று, எங்களுடைய அரசாங்கம் இந்த வருடம் 25 மில்லியன் டாலர்ஸ், அதாவது 25 கோடி ரூபாயிலிருந்து 30 கோடி ரூபாய்கள் என்று சொல்லலாம். அந்த அளவுக்கு மலாய் நாட்டு அரசாங்கம் தமிழுக்கு ஆதரவு கொடுத்து வருகின்றது. அங்கே இப்போது 452 தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் நிலையாக நிலைத்து இருக்கவேண்டும். தமிழ் மொழி நிலைத்து இருக்க வேண்டும்.

தமிழ்ப் பண்பாடு, எங்கே தமிழர்கள் இருந்தாலும் அங்கே தமிழ் நிலைபெற வேண்டும் என்று வாழ்க்கையில் எப்போதும் நம்முடைய ஒரு கொள்கையாக எடுத்துக்கொண்டு, எங்கள் தேசத் தலைவர் மாண்புமிகு சா.சாமிவேல் அவர்கள் தலைமையில், எங்களால் முடிந்த தொண்டை நாங்கள் செய்து கொண்டு வருகிறோம்.

# ஆதிதிராவிடர்க்கு மாண்புமிகு முதலமைச்சர் உதவி

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றில் பழங்குடியினர் துணைத் திட்டமும் அடங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இத்திட்டத்தின் கீழ் ரூ.42.63 இலட்சம் செலவில், பெரியார், தர்மபுரி, சேலம், கோவை, காமராசர் மற்றும் திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் சிதறி வாழும் பழங்குடியினருக்காகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களையும், வீட்டு வசதித் திட்டங்களையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார். இத் திட்டங்கள் நடப்பு ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் ரூ.5.23 இலட்சம் செலவில், சேலம், திருவண்ணாமலை சம்புவராயர், வட ஆர்க்காடு அம்பேத்கர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்காக 42 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை அவர்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில் வழங்க ஆணையிட்டுள்ளார். இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மூலம் செயல்படுத்தப்படும்.

# நூல் நயம்

### கடவுள்

ஆசிரியர்: மகாத்மா காந்தி

மொழிபெயர்ப்பு :ஜெயமணி சுப்பிரமணியம்

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை 625 020

பக்கம் 77 விலை ரூ.8

அண்ணல் காந்தியடிகள், கடவுள் குறித்த தம் அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

“அகிம்சையே என் கடவுள் சத்தியமே என் கடவுள்” என்று கூறும் காந்தியடிகள், “அகிம்சை என்பது மிகவும் ஆற்றல் வாய்ந்த சக்தி. அதுவே ஆன்ம சக்தி அல்லது நம்முன் வதியும் கடவுளின் சக்தி” என்று கோடிட்டுக் காட்டுகின்றார்.

நூல் முழுவதும் கடவுள் தத்துவம் குறித்த கருத்துரைகள் நிறைந்துள்ளன. அவையாவும் படித்து மனத்திலே இருத்திக் கொள்ளத் தக்க அற்புத வரிகள்.

— மறைமலை

### யோகாசனம்

ஆசிரியர் தமிழ்மணி

வெளியீடு கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92, கங்கையம்மன் கோயில் தெரு,
வடபழனி,
சென்னை 26

பக்கம் 128 விலை ரூ.16

இருபது யோகாசனங்களை, ஒவ்வொரு யோகாசனமும் எப்படிச் செய்ய வேண்டும்? பலன் என்ன? பயிற்சிக்கு உகந்த நேரம் எது? என்று படங்களுடன் விளக்கும் நூல் இது. சில யோகாசனங்களுக்கு ஆசிரியரின் எச்சரிக்கைகளும் உண்டு. யோகாசனம் பயில விரும்புவோர்க்கு நல்ல வழிகாட்டி.

— என். குமாரசாமி

### தியாகம் ஞானம் மோனம்

ஆசிரியர்: ஸ்வாமி முருகானந்தா

வெளியீடு: கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கை அம்மன் கோவில் தெரு,
வடபழனி,
சென்னை 600 026.

பக்கம்:96 விலை: ரூ.12

தியானம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? மோனம் என்றால் என்ன? என்பதை விளக்கும் நூல் இது.

மனதை ஒரு நிலைப்படுத்தும் தியானத்தையும் தன்னை அறிய உதவும் ஞானத்தையும், பரம்பொருளை உணர உதவும் மோனத்தையும், சமயப் பெரியார்கள், சித்தர்கள் அருளாளர்களின் வாக்குகளை மேற்கோள் காட்டி தெளிவுபடுத்தியுள்ளார் ஆசிரியர். ஆன்மீக வாதிகளுக்கு இந்நூல் பக்தியமிர்தம் .

— குமார்

### மதங்களின் மந்திரவாக்கு

ஆசிரியர்: தங்கமணி

வெளியீடு: சகுந்தலை நிலையம்
58, ஐயப்பச் செட்டித் தெரு, மண்ணடி,
சென்னை 600 001

பக்கம்:76 விலை: ரூ.12

உலகில் பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப்படும் எட்டு மதங்களின் வேத நூல்களின் சாரம் இந்நூல். முத்துக் கோத்தாற்போல் சின்னச் சின்ன வாக்கியங்கள், தெளிவான சொற்றொடரின் மூலம் ஒவ்வொரு மதத்தின் போதனைகளும் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது.

‘மந்திர வாக்குகள் மனநலம் ஊட்டும்’. நிச்சயம் இந்நூலைப் படித்தவர்களுக்கு மனநலம் கிட்டும்.

### ‘ஞானானந்தம்’

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்

வெளியீடு: ஓரி நிலையம்,
337, சத்தியமூர்த்தி நகர்
நந்தனம்,
சென்னை 600 035.

பக்கம்:104 விலை: ரூ.15

பிள்ளையார் சுழியின் பொருள் என்ன என்பதிலிருந்து, எதற்கு எல்லைக் கோடு வேண்டும் எதற்கு வேண்டாம் என்பன போன்ற விளக்கங்களும் எத்தனையோ தத்துவங்களுக்குப் பொருளும் இந்நூலில் பொதிந்துள்ளன. படிக்கும்போது மனதுக்கு அமைதியும், மகிழ்ச்சியும் தரும் நூல்.

### வலியற்ற இயற்கை மகப்பேறும் குழந்தை நலப் பராமரிப்பும்

ஆசிரியர்: டாக்டர் அண்ணாஜி

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிமிடெட்,
41 சி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை 600 098.

பக்கம்: 175 விலை: ரூ.24

இந்நூலில், வலியற்ற மகப்பேற்றிற்கான வழிமுறைகள், கருவுற்ற பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், பயிற்சிகள், கருத்தடை முறைகள், குழந்தை வளர்ப்பு, இளம் குழந்தைப் பருவத்து நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்த அறிவியல் விளக்கங்கள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சுகாதாரப் பணியாளர்கள், இளம் தம்பதிகள், தாய்மார்கள் அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

— கு. மல்லிகா

## சாதனைப் பூக்களை மலர்விக்கும் சோலைவனம்

# கோவை மாவட்டம்

ஆனைமலையின் அடர்ந்த வனப்பகுதி. மஞ்சளான அந்தி நேரம். விடியலிலிருந்து மரத்துண்டுகளை அயராது அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்ட யானைகள் மாலையில் மாவுத்தர்களோடு தங்குமிடங்களுக்குச் செல் வது வாடிக்கை. ஆனால், இங்கே ஒரு வேடிக்கை !

இந்த யானைக்கூட்டம் ஏன் இங்கே சூழ்ந்து அசைந்தாடியபடி நிற்கின்றன? ஒரு சிறிய குடிசையின் உள்ளே காற்றுக்கேற்றபடி நடனம் புரிந்து கொண்டிருக்கும் மண்ணெண்ணெய் விளக்கின் தீபம் அருகே பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் ஒரு அறிவொளி இயக்க ஆசிரியர்.

யானைகளுக்கும் அறிவொளிக்கும் என்ன சம்பந்தம்? ஆச்சரியமாக இருக்கிறதா, அதோ



அவர் பேர் கேத்தன். அவர் ஒரு அறிவொளி ஆசிரியர் மட்டுமல்ல. அவரருகே அமர்ந்து கல்வி கற்கும் மாவுத்தர்களைப் போல அவரும் ஒரு மாவுத்தர்.

மாவுத்தர்கள் குடிசைக்குள்ளே அறிவொளி பெறுகிறார்கள். அவர்களின் யானைக் கூட்டங்கள் வெளியே அவர்களுக்காகக் காத்திருக்கின்றன. இப்படி யானை பரிவாரத்தைக் கூட காக்கவைக்கும் அளவுக்குக் கோவை மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் வேரூன்றி வியாபித்திருக்கிறது.

கோவை மாவட்ட அறிவொளி இயக்கத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணம், இந்தப் பின்னணியில், கோவை மாவட்டச் சிறப்பிதழுக்காகத் தமிழரசு குழு கோவையில் **164** -வது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.வி.சங்கர் இ.ஆ.ப., அவர்களை **27.3.95** அன்று சந்தித்தது.

மாவட்ட ஆட்சியரின் இருக்கைக்குப் பின்னால், வரிசையாகக் கேடயங்களும், பாராட்டுக்களும் பளிச்சிட்டன. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்முகத்தோடு வரவேற்று, மாவட்டத்தில் ஆற்றப்பட்டுவரும் அரசின் நலத்திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும், புள்ளிவிவரங்களோடு சுட்டிக் காட்டி விளக்கினார்.

கடந்த நான்காண்டுகளாகக் கோவை மாவட்டம் இருபதம்சத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி, தமிழ்நாட்டிலேயே முதலிடம் வகித்தமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாராட்டி, சுழற் கேடயம் வழங்கியிருக்கிறார்.

இது தவிர, சென்ற ஆண்டு **(1993-94)** சிறுசேமிப்பில் மாநிலத்திலேயே அதிகத் தொகை சேர்த்து, முதலாவது இடத்தை வகித்தமைக்காகச் சிறப்புக் கேடயமும் பரிசும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது.



சாண எரிவாயுக்கலன்கள் அமைப்பதில் இந்தியாவிலேயே, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அவினாசி ஒன்றியம் சிறப்பிடம் வகிக்கிறது.

### சுடர்விடும் அறிவொளி

தொடக்கத்திலேயே இம்மாவட்டத்தில் கல்லாமையை இல்லாமையாக்கும் அறிவொளி இயக்கத்தைத் தனது தலையாய பணியாகச் செய்துவருவதாக மாவட்ட ஆட்சியர் சொன்னார். ஏனென்றால், எந்த ஒரு அரசுத் திட்டமும் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் கல்வியறிவு அவசியம். அதை இந்த அறிவொளி இயக்கம் மூலம் செய்து வருகிறோம் என்றார். அவர் மேலும் சொன்னதாவது:

கடந்த இரண்டாண்டுகளாக அறிவொளி இயக்கம் கோவை மாவட்டத்தில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட மக்கட் தொகையில் 6.25 இலட்சம் பேர் கல்லாதவர்கள். அவர்களில் 5.2 இலட்சம் பேர்களை அரும்பாடுபட்டு இவ்வியக்கத்தில் சேர்த்துள்ளோம். இவர்கள் 9 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்டவர்கள்.

பலதரப்பட்ட மக்கள் மதம், மொழி, ஜாதி, ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி இந்த அறிவொளி இயக்கத்தில் சேர்ந்து பயனடைவதை நேரில் காணமுடிகிறது. இதன் மூலம் சமூக ஒற்றுமையைக் காண்கிறேன். பெண்களும், ஊனமுற்றோரும் இதில் அதிக அளவில் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். இதுவரை அறிவொளிப் பயனாளிகளில் 9900 பெண்களுக்குப் பலவகைப்பட்ட கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் பாதிப் பேருக்கு மேல் தாழ்த்தப்பட்ட/பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

அறிவொளி தொண்டர்களுக்கு, வேலை வாய்ப்பிலும், பிற அரசு நலத்திட்ட உதவிகளிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்டக் கலைக்கழகம் என்ற அமைப்பு நிறுவப்பட்டு, அதன் மூலம் அறிவொளி மக்களிடையே பேச்சாற்றல், ஓவியம், படைப்பாற்றல் போன்றவை வளர்க்கப்படுகின்றன. இதற்காக ரூ.10,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேறெந்த மாவட்டத்திலும் இல்லாதபடி 'அறிவொளிநகர்' என்ற குடியிருப்புகள் 3 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டமெங்கும் 1200 படிப்பகங்கள் தொடங்கப்பட்டு, அனைத்திற்கும் தினசரிப் பத்திரிகைகள் வாங்க வழிவகை செய்யப்பட்டுள்ளன.

'கைநாட்டு முதல் கம்யூட்டர் வரை' என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு, எழுதப் படிக்கத் தெரியாதவருக்கு எழுதப்படிக்கவும், நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள் கம்ப்யூட்டர் போன்ற கருவிகளில் பயிற்சி பெறவும், வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அறிவொளிப் பயிற்சியில் ஆர்வம் ஏற்பட, 4000 கிராமங்களில் கலைநிகழ்ச்சிகள், பட்டிமன்றம், பொம்மலாட்டம், பேரணிகள், திருவிழாக்கள் நடத்தப்பட்டு ஏறக்குறைய 8 முதல் 12 இலட்சம் பேர்கள் இந்நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துள்ளார்கள்.

கிட்டத்தட்ட 15 சதவிகிதம் கற்றோரின் எண்ணிக்கை இந்தத் திட்டத்தின் மூலம் அதிகரித்துள்ளது. இதற்காகத் தொடக்க

அறிவொளி திட்டத்துக்கு 3.8 கோடி ரூபாய் செலவும், இரண்டாம் கட்ட அறிவொளித் திட்டத்துக்கு ரூ.1.94 கோடியும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தொழில்வளர்ச்சி

கோவை மாவட்டம் 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என்றழைக்கப்படுகிறது. அந்தச் சீர்மை என்றும் நீடிக்கவும் கோவை மாவட்டத்தில் தொழில் வளரவும் அனைத்து முயற்சிகளும்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன சான்றாகக் கடந்த மூன்றாண்டுகளில் கோவை மாவட்டத்தில் 166 உயர்மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மின்னிணைப்பும், 10, 258 குறைந்தமின்அழுத்ததொழிற்சாலைகளுக்கு மின்னிணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

மின் தட்டுப்பாடு எந்நிலையிலும் வரக்கூடாது என்பதற்காகக் கடந்த 1992-ல் 4 துணை மின் நிலையங்களும், 1994-ல் இரண்டும், 1995-ல் இரண்டும் ஆக எட்டு துணை மின் நிலையங்கள் ரூ.19.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது கூடுதலாக ஆறு துணை மின்னிலையங்கள் ரூ.23 கோடி செலவில் அமைக்கப்பட வுள்ளன.

### காற்றாலைக்ள்

இது தவிர- கேத்தனூர், பூலாவாடி ஆகிய இடங்களில் 40 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. தற் போது பல்லடம் அருகேயுள்ள இடையர் பாளையம் என்ற ஊரில் ரூ.7 கோடி செல வில் 2 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒரு காற்றாலை 200 எக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படவுள்ளது. தற்போது 18 தனியார் நிறுவனங்கள் காற்றர்லைகள் அமைத்துள்ளன. இது தவிர மேலும் 24 தனியார் நிறுவனங்களுக்குக் காற்றாலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்குச் சுமுகமான சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் நிலவிடவேண்டும். அதைக் கோவை மாவட்டம் சிறப்பாகச் செய்து வருகிறது.

பில்லூர் குடிநீர்த் திட்டத்தின் மூலம் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினை கணிச மாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, குடி மங்கலம் ஆகிய இடங்களில் குடிநீர்த்திட்டங்கள் ரூ.58 கோடி செலவில் வடிவமைக்கப்பட்டு அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட் டுள்ளன.


மாவட்டத்தில் தொழிலாளர் பிரச்சினை ஏதுமின்றித் தொழிலமைதி நிலவ வழிவகை காணப்பட்டுள்ளது.

திருப்பூரில் மில் தொழிலாளர்களிடையே போனஸ் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளன. தொழில் முனைவோரி டையேயுள்ள குறைகளைத் தீர்க்க மாதந் தோறும் குறைதீர்ப்புக் கூட்டங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. தொழில் வளர்ச்சிக்கு அனைத்து வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் செய்து, நல்லதொரு சூழலை ஏற்படுத்தி யுள்ளது. ஏற்கெனவே உள்ள 4 தொழிற் பேட்டைகளைத்தவிர, மேலும் புதிதாகக் கோவை மலுமிச்சம்பட்டியிலும், திருப்பூர் செட்டிப்பாளையத்திலும் தொழிற்பேட் டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் மக்களுக்கும், பெண்களுக் கும் அரசுத்திட்டங்கள், உதவிகள் நிறைவேற்று வதில் கோவை மாவட்டம் முன்னணியில் உள்ளது. சான்றாக, முதலமைச்சர் சிறப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புக் குடிலுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் 8540 குடிசை களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பில் சென்ற ஆண்டு மாநிலத் திலேயே முதல் மாவட்டமாக விளங்கி





சாதனை படைத்தது. அதே போல இவ் வாண்டும் வசூலில் சாதனை படைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

**கோவைக் குற்றாலம்**

சுற்றுலா வளர்ச்சிக்குக் கோவை பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. கோவைக் குற்றாலம் என்ற புதிய திட்டத்தைச் சிறுவாணிக்கருகே ரூ.24 இலட்சம் செலவில் அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுத்து, அரசின் பரிசீலனைக்காக அனுப்பப் பட்டுள்ளது. இங்கு சுற்றுலாப் பயணிகள் தங்க நவீன தங்கும் குடில்கள், குளியலறைகள் போன்றவை அமைக்கப்படும்.

ஆளியார் அணையில் ரூ.1.5 இலட்சம் செலவில் படகுக்குழாம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. வால்பாறையில் ஆண்டுதோறும் மே மாதத்தில் கோடை விழாவும், பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயி லில் ஆண்டுதோறும் சிதம்பரத்தில் நடப்பது போல நாட்டியாஞ்சலியும் நடத்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளன.

மருதமலையில் ரூ.1.25 கோடியில் தங்கத் தேர் அமைக்கும் பணியும், ரூ.120 இலட்சத்தில் ராஜகோபுரம் கட்டுமானப்பணிகளும் சிறப் பாக நடைபெற்று வருகின்றன. அவினாசி திருக்கோயிலுக்குப் புதிய தேர் ரூபாய் 50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

வால்பாறைக்கு வரும் சுற்றுலாப் பயணி களைக் கவர, பயணிகள் தங்கும் விடுதி, சிறுவர் பூங்கா, சமுதாயக்கூடம் போன்றவை ரூ.162.72 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்சத்திட்டம் குறைவற நிறைவேற்றும் பணியைச் செவ்வனே செய்து வருகிறது கோவை மாவட்டம்.

**விளையாட்டு வளர்ச்சி**

விளையாட்டுத்துறை வளர்ச்சிக்குக் கோவை மாவட்டம் பல அடிப்படை வசதி களைச் செய்து ஊக்குவிக்கிறது. குறிப்பாக 18 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.36 இலட்சம் செலவில் ஊரக விளையாட்டு மையங்கள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இதன் மூலம் கிராமத்து இளைஞர்களின் விளையாட்டுத் திறமைகள் வெளிப்படும்.

கோவை நகரிலுள்ள சாஸ்திரி மைதா னத்தில் பன்னோக்கு விளையாட்டரங்கம் ரூ.2.63 கோடி செலவில் கட்டப்படவுள்ளது. இதனுள், டென்னிஸ், கிரிக்கெட் விளை யாட்டுக்கான நவீன தளங்கள் அமைக்கப் படும். மேலும் சர்வதேசத்தரம் வாய்ந்த நீச்சல்குளம் ஒன்றும் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் இவ்விளையாட்டரங்கில் கட்டப் படும்.

கோவையில் உள்ள வ.உ.சி. பூங்காவில் ரூ.10 இலட்சம் செலவில் கூடைப்பந்து விளையாட்டு மைதானத்தைச் சுற்றிப் பார் வையாளர் இருக்கைகள் கட்டப்படவுள்ளன. இதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கி விட்டன.

**குறிப்பிடத்தக்க சிறப்புகள்**

கோவை மாவட்டத்துக்கு வேறுசில சிறப்புகளும் உண்டு. கோவையிலுள்ள ஜப் பானிய காடைக்குஞ்சு பொரிக்கும் மையம் தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய தாகும்.

இந்தியாவிலேயே இரண்டாவது அதிநவீன அஞ்சலகம் கோவையில் அமைக்கப்பட்டுள் ளது. இந்தியாவெங்கும்





சிறப்புப் பெற்ற சைனிக் பள்ளி அமராவதி யில் உள்ளது.

கோவை கருடாம்பாளையத்தில் மத்திய ஆயுதப் படைக்காவலர் பயிற்சி மையம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக 400 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் குடிநீர் வழங்கு திட்டம் ரூ.150 கோடி மதிப்பீட்டில் புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சித் திட்டக் குழுமத்தின் வாயிலாக நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டம் நம் நாட்டுக்கே ஒரு முன்னோடித் திட்டமாக இருக்கும்.

இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அத்துறையில் செவ்வனே செயலாற்றி, அவற்றில் சாதனைப்பூக்களை மலர்விக்கும் சோலைவனமாகக் கோவை மாவட்டம் திகழ்கிறது. அதற்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் அரசு அலுவலர்களை நிரம்பவே கொண்டிருக்கிறது, இம் மாவட்டம் என்றார் மாவட்ட ஆட்சித் தலைவர்.


**With Best Compliments From**

**AEROSPACE**

Materials Private Limited

Office: 1044, Cross-Cut Road, Coimbatore,

Tamil Nadu INDIA 641 012

Phone: 436956 Fax: 0422 436536


***"Let us salute to the Soldiers***

***who guard our Nation***

***Let us salute to the Scientists***

***who silently elevate Indian Science***

***in the World Senerio"***



☆ முதலான தொழில் நுட்பங்கள்

# செலவைக் குறைத்து வசதியைப் பெருக்கும் கட்டட மையம்

கட்டடத் தொழிலில் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொண்டு, அதனைச் செயல்படுத்துதல், கிராமப் பகுதி களிலுள்ள கட்டடத் தொழி லாளர்களுக்கு நவீன தொழில் நுட்பத்தில் பயிற்சியளித்தல், குறைந்த செலவில் நிறைவான வசதிகளுடன் கட்டடங்கள் அமைத்தல் போன்ற குறிக்கோள் களுடன், வடவள்ளி எனுமிடத் தில் தொடங்கப்பட்டது கட்டட மையம்.

மாவட்ட ஆட்சித்தலைவ ரைத் தலைவராகவும், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) உறுப்பினர் செயலாளராகவும் திட்டப் பொறி யாளரைச் செயலாளராகவும் கொண்டு இந்தக் கட்டட மையம் இயங்குகிறது.

## நவீன தொழில் நுட்பங்கள்

☆ இரண்டு கற்களுக்கிடையே இடைவெளி.

☆ மங்களூர் ஓடுகளைக் கொண்டு அமைக்கப்படும் மேற்கூறை.

☆ மேம்படுத்தப்பட்ட களிமண் தொழில்நுட்பம்.


☆ பெரோ சிமெண்ட் கதவுகள் மற்றும் ஜன்னல் கதவுகள்.

கையாளப்படுகின்றன.

## கட்டடமையத்தின் செயல்பாடுகள்

கோவைக் கட்டட மையம் நவீன தொழில் நுட்பங்களைக் கையாண்டு சத்துணவு மையக் கட்டடங்கள், பள்ளிக்கட்டடங்கள், கால்நடை மருந்தகக் கட்டடங்கள், நூலகக் கட்டடங்கள், அலுவல கம் மற்றும் தனியார் குடி யிருப்புகள் போன்றவை ரூ.40 இலட்சம் செலவீட்டில் கட்டி உள்ளது. இது தவிர ரூ.75 இலட் சத்துக்கான பணிகள் முடிக்கப் பட உள்ளன. கட்டுமானச் செலவில் 30 விழுக்காடு மிச்சப் படுத்த முடியும் என்று கட்டட மையம் செயல்படுத்திக் காட்டி





★ மனிதன் உலகில் தன் சுயமரியாதையை, தன்மானத்தை உயிருக்குச் சமமாகக் கொள்ளவேண்டும்.

— தந்தை பெரியார்

உள்ளது. இதுவரை 100 கொத்த னார்களுக்குக் கொடுக்கப்பட்டு உள்ளன.

வால்பாறை பேரூராட்சியில் கட்டட மையத்தின் மூலம் ஒரு கோடியே 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தங்குமிடங்கள், உணவகங்கள் அமைக்கவும், பேரூரில் நவீன கழிப்பிடங்கள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், மெதாவர் காலனியில் 39 குடியிருப்புகள் ரூ.13 இலட்சத்து 64 ஆயிரம் மதிப்பீட்டிலும், கணபதியில் ஹட்கோ காலனி ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படவுள்ளன.

கோவைக் கட்டட மையம் குறைந்த செலவில் நிறைந்த வசதிகளைச் செய்து தருவதில் முன்னணியில் இருப்பதோடு, நவீன தொழில் நுட்பங்களைக் கட்டடத் தொழிலாளர்கள் வழியாகப் புகுத்துவதிலும் நிறைவான பணியைச் செய்து வருகிறது. புதுமை எங்கிருந்து வந்தாலும் அதனை இருகை கொண்டு வரவேற்போம் என்கிற குறிக்கோளோடு கோவை மையம் செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

**கோவையில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், அண்மையில் திறந்து வைக்கப்பட்ட 'பூ மகள் மகராசி' என்ற அழகுச் சிலை!**




## உட்கார்ந்து எழுவதில் உலகச் சாதனை

**கோ**வை நகரைச் சேர்ந்த இளைஞர் ஜோசப் ஜேம்ஸ் (வயது 27) உட்கார்ந்து எழுவதில் (பஸ்கி) உலகச் சாதனை படைத்துள்ளார்.

'தி அவுஸ் ஆப் கெடியாஸ்' என்ற அமைப்பின் சார்பில் புது டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் திரு.ஜேம்ஸ் இந்தச் சாதனையைப் படைத்து உள்ளார். ஏற்கெனவே, ஒரு மணி நேரத்தில் 4289 முறை உட்கார்ந்து எழுந்து திரு.பால்வை மேன்சுங் என்பவர் சாதனை புரிந்து, கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

இப்போது, திரு. ஜேம்ஸ் ஒரு மணிநேரத்தில் 4300 முறை உட்கார்ந்து எழுந்து முந்தைய சாதனையை முறியடித்துள்ளார். 'லிம்கா புக் ஆப் ரெக்கார்ட்ஸ்' அலுவலகத்தில் இந்தச் சாதனையை இவர் நிகழ்த்தியுள்ளார்.

1. 2 HP முதல் 100 HP வரையிலும் சப்மெர்சிபல் மோட்டார் பழுது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்.

2. ஜெட் மோட்டார்கள், சென்ரிபிகள் மோட்டார்கள் பழுது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்.

3. ஆழ்குழாயில் சிக்கிய மோட்டார்கள், பைப்புகள் மற்றும் உதிரி பாகங்களை ஆழ்குழாய் சேதம் அடையாமல் எடுத்துக் கொடுக்கப்படும்.

4. பவர்லூம் தறிக்குத் தேவையான மோட்டார்கள், ஆயில் இன்ஜின்கள், ஜெனரேட்டர்கள் சிறந்த முறையில் பழுது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்.

5. வீட்டிற்கும் குடோன்களுக்கும் தேவையான கதவுகள், ஜன்னல்கள், டிரஸ் வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

5. விவசாய கிணறுகளுக்குத் தேவையான கிரேன்கள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

சிறந்த முறையில் செய்து கொடுக்க

அணுகவும்

**வீணா இன்ஜினியரிங்**

**12 - A. T.G. நகர், வீரகேரளம்,**

**கோயமுத்தூர்.**

# SREE SENTHIL ENGINEERING COMPANY

**Manufacturers:**

**Borewell Compressor & Pneumatic Pumps**

***Factory at:***

***A-12, The Coimbatore (P) Industrial Estate,***

***Industrial Estate (PO)***

***Coimbatore-21***

எங்கள் நிறுவனத்தின் மூலம், குடிநீர் சம்பந்தமான காரியங்களுக்கும், விவசாய சம்பந்தமான காரியங்களுக்கும், ஏர் கம்ப்ரசர் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்கள் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

# கோவையில்...




★கோயம்புத்தூர் மாவட்டத்திலேயே புகழ் பெற்றது பொள்ளாச்சி சந்தை. காய்கறிகள், தேங்காய், வெங்காயம், பச்சைமிளகாய், பரங்கிக்காய், பூசணி போன்றவை இந்தச் சந்தையில் போர் போராகக் குவிக்கப்பட்டிருக்கும். தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்துமட்டுமல்ல; பிற மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் இச்சந்தைக்கு வந்துபோவார்கள்.

★பொள்ளாச்சியில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. எஸ் கந்தசாமி அவர்களிடம் நாம் சில கேள்விகள் கேட்டோம்; அவரளித்த பதில் மூலம் நமக்குத் தெரியவந்த விவரங்கள் இவை:


பொள்ளாச்சி வட்டத்தில் 141 சமூகக் கல்வி நிலையங்களும், 250 கிராம வானொலி மன்றங்களும், 42 இளைஞர் மன்றங்களும், 11 மருத்துவ நிலையங்களும், 38 தாய்சேய் நல நிலையங்களும், 20 தனியார் மருத்துவமனைகளும், 179 மகளிர் மன்றங்களும், 339 மதிய உணவு மையங்களும் இருக்கின்றன.

## அவினாசிக்கு முதல் பரிசு

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி வட்டாரம், 3,000 சாண எரிவாயுக் கலன்களை அமைத்து அனைத்திந்திய அளவில் சிறந்த வட்டாரத்திற்கான முதல் பரிசு பெற்றுள்ளது.



✪ கொங்குநாடு நெய்தல் நில வளமற்ற உள்நாட்டுப் பிரதேசமானாலும் குறிஞ்சி நில வளம் மிகுந்திருந்தது; எனவே, காடும் காட்டைச் சேர்ந்த முல்லை நிலங்களும் அதிகம், நெல் விளையும் மருத நிலங்களும் மிகுதியாயிருந்தன.



# கோவை: பாலம் கட்டும் பணிகள்

ரூ.66 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், கோவை மாவட் டத்தில் கவுண்டம்பாளையம் ஒணாம்பாளையம் சாலையில் பாலம் கட்டும் பணி இரவு பகலாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இப்பணி நிறைவடையக்கூடும்.

இதேபோல், கோவை மேட் டுப்பாளையம் சாலையில் பெரியநாயக்கன் பாளையத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பெரிய பாலம் கட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. மத்தம்பாளையத்தில் ரூ.40 இலட்சத்தில் ஒரு பாலமும் காரமடை அருகே ரூ.40 இலட் சத்தில் ஒரு பெரும் பாலமும் கட்டத் தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

இதற்காக ரூ.1.50 கோடியை மாண்புமிகு தமிழக முதலமைச் சர் அவர்கள் அனுமதித்துள்ளார்.


*With best compliments from*

## Asian Radiators

**43, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. India.**

**Phone : 862510 & 862518, Fax:0422-212957, Telex: 0855-658,**

**Cable : Cool Heat**

**A Quality Product - Engineered To Last Long**

**OUR PRODUCT RANGE**

- ☆ *RADIATORS*
- ☆ *CHARGE AIR COOLERS*
- ☆ *FIN COIL CONDENSERS AND EVAPORATORS*
- ☆ *PRESSED COMPONENTS*
- ☆ *WATER COOLED & AIR COOLED OIL COOLERS*
- ☆ *AIR HEATERS*

# இலக்கியத்தில் காதல்

டாக்டர் சாரதா நம்பி ஆரூரன் அவர்கள்

அறம், பொருள், இன்பம், வீடு என்ற 4 பிரிவுகளையும் நாம் அறிவோம். இது தமிழர்களுக்கு உரியதும் அல்ல. ஏன் என்றால் திருவள்ளுவர் காமத்துப் பாலுக்கு உரை எழுதப் புகும் முன்— முன்னுரையில் கூறுகின்றார், பரிமேல் அழகர். இவர் பொருள் பாகுபாட்டினை அறம், பொருள், இன்பம் என வடமொழி வழக்கு பற்றி ஒழுகலாம் என்று கூறுகிறார். எனவே, இந்த அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் நம்முடைய பாகுபாட்டில் இரண்டு கூறுகளுக்குள் அடங்குகின்றன. இந்த இன்பத்தை அகம் என்றும், அறம், பொருள், வீடு ஆகிய மூன்றையும் புறம் என்றும் வகைப்படுத்துவது நம்முடைய மரபு.

மற்றொரு காரணம் காட்டி விளக்கலாம் என்று நினைக்கின்றேன். திருக்கோவையாருக்கு உரை எழுதப் போகின்ற பேராசிரியர் ஒரு வரிக்கு அற்புதமாக உரை எழுதுகின்றார். உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழில் உயர்வாய் தோய்ந்தனையோ என்று ஒரு வரிக்கு எழுதும் போது இந்தத் தீந்தமிழில் துறை என்பதற்குத் தமிழின் துறைகளாவன இந்த அகமும், புறமும். எனவே, இந்த அகம், புறம் என்று அற்புதமான அமைப்பு தமிழுக்குரிய அற்புதமான ஒரு கருவூலம் என்றே நாம் கூறமுடியும். காதல் என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்ளலாம் என்று நினைத்துப் பார்க்கிறேன்.

அடியவர் ஆண்டவன் மீது கொள்ளுகின்ற காதலுக்குப் பக்தி என்று பொருள். 'காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி, ஓது வார்தனை நன்னெறிக்குய்ப்பது, வேதம் நான்கிலும் மெய்ப் பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயமே' என்று ஞான சம்பந்தர் உருகுகின்ற காதலுக்குப் பக்தி என்று பொருள்.

ஒரு தாய் மகனிடம் கொள்ளுகின்ற காதலுக்குப் பாசம் என்று பெயர். ஒரு தலைவன் தலைவி மீது கொள்ளுகின்ற அந்தக் காதலின் ஒரு கூறுக்குக் காமம் என்று பெயர். ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்பது வள்ளுவப் பெருந்தகையின் கூற்று. என்ன இந்தப் பாடல்கள் நம்முடைய சமுதாயத்திற்கு உணர்த்துகின்றன என்பதைப் பார்க்கும்போது நம்முடைய சமுதாயத்திலே இருக்கின்ற அடிப்படைத் திருமண முறை, ஆணும், பெண்ணும் தானே, கொள்வாரும் இல்லாமல், கொடுப்பாரும் இல்லாமல் எதிர்ப்பட்டு மணம் செய்து கொண்டிருந்த வழக்கம் மாறி டாக்டர் என்றால் 100 பவுன் நகை, ஒரு கார், ஒரு கிளினிக் இப்படியாகப் பேரம் பேசுகின்ற அவலத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோமே, நம்முடைய பெண்கள் எத்தனைப் பேர் வரதட்சணைக் கொடுமையால் சீரழிந்துகொண்டிருக்கிறார்கள், ஏன் இந்த நிலை? நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

புதுக்கவிஞன் சொல்லுகின்றான், வில்லை ஒடித்து மணக்க ராமன் வராவிட்டாலும் பரவாயில்லை, தூக்கிச் செல்ல ராவணனாவது வர மாட்டானா என்று பெண்கள் வருந்துகின்ற அவல நிலை ஏன் ஏற்பட்டது? இந்தப் பெண்கள் திருமணம் ஆகாமல் முதிர் கன்னிகள் என்ற ஒரு புதிய சொல்லை நாம்படைத்துக்கொண்டிருக்கிறோம்.

வெண்டைக்காய் முற்றலாம்; கத்தரிக்காய் முற்றலாம்; கன்னிப் பெண்கள் முற்றினால் எப்படி இருக்கும்? முதிர்கன்னிகள் என்ற ஒரு சொல்லை நாம் இலக்கியத்தில் படைத்துக்கொண்டிருக்கிறோம். என்ன காரணம்? இந்த அடிப்படை மரபு, காதல் திருமணங்கள் நம்மிடையே மறைந்துபோனது தான்.


எல்லோரையும் பார்த்ததும் காதல் வராது. ஒரு தலைவன் சொல்லுகிறான், என்னுடைய தாயும், உன்னுடைய தாயும் எந்த வகையிலும் உறவு இல்லை. என்னுடைய தந்தையும் உன்னுடைய தந்தையும் ஒருவரையொருவர் அறிந்தார் இல்லை. நான் உன்னை

இதற்கு முன் பார்த்தது கூட கிடையாது; ஆனால், எப்போது உன்னைப் பார்த்தேனோ அப் போதே நீதான் என் மனைவி என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

"யாயும் ஞாயும் யாராகியரோ,
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்
கலந்தனவே!"

என் தாயும் உன் தாயும் அறியார், என் தந்தையும் உன் தந்தையும் அறியார், நானும் நீயும் பழகியது இல்லை. ஆனால் நீ தான் என்னுடைய மனதைப் புரிந்து கொண்டு எனக்கு மனைவியாக வரவேண்டும் என்ற அமைப்பு முறை என்று நம் மிடையே வருகிறதோ அன்று தான்— இந்த வரதட்சணைக் கொடுமை, ஸ்டவ் வெடித்தல், மாமியார் கொடுமை, அனைத் துமே நம்மிடையே இருந்து விலக முடியும் என்பதைத் தமிழ்ப் பண் பாடு நமக்கு உணர்த்திக் காட்டு கிறது என்பதைக் கூறிக்கொள்ள முன்வருகிறேன்.

அடுத்ததாக ஒன்று இரண்டு காட்சிகளை— நம்முடைய சங்க இலக்கியங்கள் காட்டுகின்ற காதல் காட்சிகளைக் கூறுகிறேன்; அவை என்ன வாழ்வு நெறிகளை நமக்கு உணர்த்துகின்றன என்று சொல் லும்போது, சங்க இலக்கியங்களில் தோழி பெறுகின்ற இடம் மிக அற்புதமான இடம். எப்படி தோழி முக்கியமான இடத்தைப் பெறு கிறாளோ, அதுபோல— அன்னை பல சமயங்களில் கடுமையாகத்




தலைவியால் கோபித்துக் கொள்ளப்படுகிறாள்.

காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். தலைவி படுத்து இருக்கிறாள், பக்கத்திலே அம்மா படுத்து இருக்கிறாள், பக்கத்திலே தோழி. தலைவன் சந்திக்க வரு கின்றான், அவன் வெளியே காத்துக்கொண்டிருக்கிறான். இந்த அம்மா தூங்கி விட்டாளா இல் லையா என்று அறிந்துகொள்ள வேண்டும். ஒரு உளவியல் அறிஞ னாக நம்முடைய சங்க இலக்கியப் புலவனை நாம் காணுகின்ற இடம் இது. தோழி என்ன செய்கிறாள்? அம்மா தூங்குகிறாளா என்று பார்ப்பதற்கு ஒன்று இரண்டு பேச்சுக் கொடுத்துப் பார்க்கிறாள். அம்மாவிடம் சப்தமேஇல்லை. சரி அம்மா லேசாக உறங்க ஆரம் பித்து இருக்கிறாள்.

உடனே மெதுவாகப் பேச்சுக் கொடுக்கிறாள், "அம்மா நம்மு டைய தோட்டத்தில் கூதள்ம் செடி அருவி நீர்ப் பட்டுக் கலங்குகிற சப்தம் உங்களுக்குக் கேட்கிறதா?" பதிலுக்கு ஒரு குறட்டைச் சப்தம் தான் வருகிறது. அம்மாவுக்குச் சப்தம் எதுவும் கேட்கவில்லை. அம்மா தூங்குகிறாள்; அப்போ தும் தோழிக்குப் பயம்.

தலைவி எழுந்திருக்கும்போது திடீரென்று அம்மா விழித்துக் கொண்டால் என்ன செய்வது? எனவே திடுக்கிடும்படியான ஏதா வது ஒரு செய்தியைச் சொல்லி இந்த அம்மா ஆழ்ந்த தூக்கம் கொண்டிருக்கிறாளா அல்லது லேசான தூக்கம் கொண்டிருக் கிறாளா என்பதை அறிந்து கொள்ளவேண்டுமென்று நினைக் கின்ற தோழி மற்றொரு செய்தி யைச் சொல்லுகின்றாள்.

"அம்மா உங்களுக்கு விஷயம் தெரியுமோ? நம்முடைய அசோக மரத்தில் ஊஞ்சல் ஆடுவதற்கு ஒரு கயிறு கட்டியிருந்தோம், அந்தக் கயிற்றைப் பாம்பு என்று நினைத்து இடி தடால் என்று விழுந்து அசோக மரம் விழுந்துவிட்டது தெரியுமோ?" என்று படபட வென்று பேசுகிறாள். பதிலுக்குக் குறட்டை சப்தமே வருகிறது. தோழி உணர்ந்து கொள்கிறாள், அம்மாவின் தூக்கம் ஆழ்ந்த தூக்கம். தலைவியைத் தலை வனோடு சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறாள். என்ன காரணம் என்றால், அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை.

ஒருவன் ஒருத்தியோடு பழகி னான் என்றால் அவர்களின் வாழ்க்கை இறுதி வரை ஒன்று பட்ட வாழ்க்கையாக இருந்தது. பெற்றோர்கள் சம்மதிக்காவிட் டாலும் உடன்போக்காகச் செல்லுகின்ற நம்முடைய தலை வியரை நம்முடைய இலக்கியங் களில் பார்க்கிறோம். தலைவி சென்று விடுகிறாள். எப்படிப் பட்ட குடும்பத்தில் வாழ்ந்தவள் தெரியுமா? தங்கக் கிண்ணத்தில் பால் சோற்றை அம்மா ஊட்ட அவள் உண்டவள். அப்படிப்பட்ட அவள் அந்தக் கல்லும், முள்ளும் நிறைந்த கானகத்தின் வழியே

செல்வதைத் தாய் பலவிதமாகச் சொல்லிப் புலம்புகின்ற பாடல் களை நம்முடைய இலக்கியங்கள் நிறையக் காட்டுகின்றன.

அந்தத் தாய் வந்து ஊட்டு கின்றபோது சொல்லுகின்றாள் அம்மா– "குழந்தாய், நீ இவ்வளவு நேரம் பந்து விளையாடிக் களைத்துவிட்டாய், இந்தப் பாலைக் குடி. ஒரு வாய் எனக்காக, ஒரு வாய் அப்பாவுக்காக...' என்று சொல்லி முதல் நாள் வரை அந்தப் பாலைக் குடித்த பெண் இன்று கணவன்மீது, கணவன் கூட இல்லை, காதலன்– இனி கணவனாக வரப்போகின்றான் என்ற அந்த நம்பிக்கையில் இந்தக் கல்லும், முள்ளும் நிறைந்த காட்டைக் கடந்து சென்றாள் என்று தன்னுடைய மகளை நினைத்து வருந்துகின்றாள்.

சிலம்பு கழிகின்ற நோன்பு ஒன்று உண்டு. திருமணத்திற்கு முன்னால் பெண் தன்னுடைய காலில் இருக்கின்ற சிலம்பினைக் கழற்றுவாள். என்னுடைய வசதி யான வீட்டில் பிறந்த இந்தப் பெண் எங்கோ சென்று ஏழை யின் குடிசையில்சிலம்பைக்கழற்றப் போகிறாளோ என்று இந்தத் தாய் புலம்புகின்றாள். அந்தப் பெண் சென்று மணம் செய்துகொண்டு, சில நாட்கள் கழித்து வருகின்றாள். தோழி கேட்கிறாள், என்னம்மா உங்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது. அவர் இருக்கின்ற ஊர் மிகவும் வறட்சியான ஒரு பகுதி. கிட்டத்தட்ட 100 அடி ஆழம் கொண்ட கிணறுகள், அந்தக் கிணற்றில் எங்கோ ஒரு இடத்தில் தண்ணீர் இருந்தால்தான் உண்டு. இந்த ஒரு கிணற்றுத் தண்ணீர் தான் பறவைகளுக்கும், அங்கிருக் கின்ற விலங்குகளுக்கும். அதுவும் சுற்றிலும் இருக்கின்ற அந்த மர இலைகள் எல்லாம் வாடி அதில் விழுந்து அழுகிப் போன தண்ணீர் தான் அந்த ஊரில் குடிதண்ணீர்.

இவள் கேலி செய்கிறாள், என்ன உன் காதலனோடு பெரிய வீராப்போடு சென்றாயே, உன்னு டைய ஊரில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லையாமே? என்று– நம்முடைய பெண்ணாக இருந் தால் ஏன் கேட்கிறாய், எல்லாம் என் தலை எழுத்து, இந்தக் காத லனை நம்பி தண்ணீர் இல்லாத காட்டுக்குப் போய்விட்டேன் என்பாள். இப்போதும் அப்படித் தானே சொல்கிறார்கள், ஏதாவது சொன்னால் தண்ணீர் இல்லாத காட்டுக்கு அனுப்பிவிடுவோம் என்று பயமுறுத்துகிறார்கள்.

எனவே, அப்படி அவள் தண்ணீர் இல்லாத காட்டுக்குச் சென்று குடித்தனம் நடத்து கின்றாள். தலைவி தன்னுடைய கணவனை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. அவள் சொல்லு கிறாள், ஆமாம் நீ சொல்லுவது உண்மை தான். என் ஊரில் இருப் பது ஒரு கிணறு. அதில் இருக்கிற தண்ணீர்தான் பறவைகளுக்கும்; அதில் இருக்கிற தண்ணீர்தான் விலங்குகளுக்கும்; எல்லா இலை களும் விழுந்து அழுகிப் போன தண்ணீர் தான். ஆனாலும் கூட அது எவ்வளவு இனிமையானது தெரியுமா? நம் அம்மா தோட்டத் தில் பாலோடு தேன் சேர்ந்து கிடைக்கின்ற அந்தச் சுவையான நீரைக் காட்டிலும் அது எனக்கு உயர்ந்தது. விலங்குகள் வாய் வைத்து நீரை அருந்தியதால் கலங்கிப் போன நீர் என்னுடைய கணவன் வீட்டு நீர் என்று சொல்லும்போது அம்மா வீட்டுப் பாலும் தேனும் கலந்து இனித் ததை விட எனக்குப் பெரியது என்று சொல்லுகிறாள். அந்தப் பக்குவம் இக்காலப் பெண்களுக்கு வர வேண்டும்.

ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவில் ஓங்கி வையம் தழைக்கும் என் றான் பாரதி. அந்தச் சம உரிமை வேண்டும் என்பதற்காகக் கொடி பிடிப்பதைக் காட்டிலும் இந்த ஒற்றுமையான, புரிந்து கொள்கிற உணர்வு இருக்குமானால் பெண் களின் அந்த வாழ்க்கை இனிமை யாக இருக்க முடியும் என்பதை அற்புதமாகச் சங்க இலக்கியத்தில் புலவன் காட்டுகின்ற செய்தியைப் பார்க்கிறோம்.

பணக்கார வீட்டுப் பெண்கள், என்னுடைய மாணவிகளில் சிலருடைய வாழ்க்கை அந்த மாதிரி அமைவதைப் பார்க்

## குட்டித் தொல்காப்பியம்!

**'இலக்கண விளக்கம்' திரு வாரூர் வைத்தியநாத தேசிக ரென்னும் சைவப் பெரியா ரொருவரால் இயற்றப் பெற்றது. அதற்கு விரிவான உரையொன் றுண்டு. அந்நூல், குட்டித் தொல்காப்பியமென்றும் வழங் கப்படும். அதில் ஐந்திலக்கணங் களையன்றிப் பொருத்த இலக் கணமும், பிரபந்த இலக்கண மும் சேர்க்கப் பெற்றுள்ளன. அந்நூல் உரையில், சில பேர கத்தியச் சூத்திரங்களும், சில சிற்றகத்தியச் சூத்திரங்களும், வேறு சில அரிய பழைய செய் யுட்களும், சூத்திரங்களும் மேற் கோள்களாக வந்துள்ளன.**

கிறேன். சில சமயங்களில் நாம் எதிர்பார்க்கிற வாழ்க்கை அமையாமல் சற்று ஏழ்மையான கணவன் அமைந்துவிட்டால் அந்தப் பெண்களின் மனதில் ஏற்படுகின்ற குறைகள் அநேகம். ஆனால், குறைகள் தேவையில்லை. எந்த இடத்திலும் செல்வம் என்பது சிந்தையின் நிறைவு என்பதைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

எனவே, இந்தப் பெண் இங்கே வேளா, வேளைக்குப் பாலும் தேனும் சாப்பிடுகிறாள்; அங்கு உண்பதற்குச் சோறு கூடக் கிடை யாது. காலையில் 8 மணிக்குச் சிற்றுண்டி .பகல் 1 மணிக்கு உணவு, இரவு 8 மணிக்குச் சிற்றுண்டி, என்றால் ஒரு நாளைக்கு 3 முறை சாப்பிடுகிறோம். ஆனால், அவள் அப்படிச் சாப்பிடுவது இல்லை. 8 மணி சிற்றுண்டியும், பிற்பகல் உணவையும் சேர்த்து 11 மணிக்குச் சாப்பிடுகிறாள். பொழுது மறுத்து உண்ணுவாள். அந்த இரண்டு நேரச் சாப்பாட்டையும் ஒரு நேர மாகச் சாப்பிடுகிற அளவுக்குத் தன்னுடைய வறுமையைப் பிறருக் குத் தெரியாமல் மறைத்துக்கொள் கின்ற ஆற்றலைத் தான் அந்தத் தலைவன் மீது இருக்கின்ற அன் பினால் பெற்றாள் என்ற அந்தத் தலைவியை நாம் பார்க்கிறோம்.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் மனது கேட்கவில்லை. வண்டி வண்டியாகச் சாமான்களை அனுப்புகிறார்கள். அந்தச் சாமான்கள் எதையும் ஏற்றுக் கொள்வதற்குத் தலைவியின் மனம் இடம் கொடுக்கவில்லை. கணவனின் கௌரவம் கெட்டுப் போகும் என்பதற்காக வந்த பொருட்களை எல்லாம் மீண்டும் அனுப்பி விடுகின்ற தலைவியை நாம் பார்க்கின்றோம். இது எதை நமக்கு உணர்த்துகின்றது? எந்த நிலைமையிலும் தன்னுடைய பிறந்த வீட்டுப் பெருமை, பிறந்த வீட்டுப் பொருட்களை நினைக் காமல் எப்போது திருமணம் ஆகி விடுகிறதோ அந்த அன்புடை நெஞ்சம், காதல் கொண்ட நெஞ்சம், கணவனின் கௌரவத் தையும், கணவனின் பெருமையை யும் எண்ண வேண்டும் என்ற ஒப்பற்ற பண்பாட்டை இந்தப் பாடல் உணர்த்துகின்றது.

இறுதியாக ஒரு செய்தியைச் சொல்லவேண்டும் என்றால், முன்னோர் தேடிய செல்வத்தை வைத்துக்கொண்டு வாழ்வது என்பது நம்முடைய இலக்கி யங்களைப் பொறுத்தவரையில் மிகவும் தாழ்வாக எண்ணப்பட்ட ஒன்று. அவனுக்கு என்ன? எதற்குப் படிக்கவேண்டும்? பத்துத் தலை முறைக்கு உட்கார்ந்து சாப்பிட லாம். அவன் அப்பா, அம்மா அவ்வளவு சம்பாதித்து வைத்து இருக்கிறார்கள் என்ற ஒரு கூற்றை நாம் கேள்விப்படுகிறோம். அது மிகவும் கேவலமானது என்பதைச் சங்க இலக்கியங்கள் உணர்த்து கின்றன.

தலைவனிடம் நிறைந்த செல்வம் இருந்தாலும் கூட நம்முடைய தென்புலத்தார், தெய்வம், விருந்து ஒக்கல் தாம் என்று எல்லோருக்கும் ஓம்ப வேண்டும் என்பதற்காக அவன் பொருள் ஈட்டச் செல்கிறான். பொருள் ஈட்டி முடித்து வரு கின்றான். தேர்ப்பாகன் தேரை விரைந்து செலுத்துகின்றான். இவன் மனக் கண் முன்னால் தனக்காகக் காத்துக் கொண்டி ருக்கின்ற தலைவியை நினைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் வீடு வந்து சேர்ந்ததைத் தலைவன் நினைக்கவில்லை. திடீரென்று இறங்குங்கள் வீடு வந்துவிட்டது என்று கூறுகின்றான் தேர்ப் பாகன். நாமாக இருந்தால் சரி என்று 3 மாதம் ஆகிவிட்டது— நேரடியாக மனைவியைப் பார்ப்ப தற்குச் செல்வோம். எவ்வளவு அருமையான பண்பாட்டினைச் சங்க இலக்கியத் தலைவனிடம் காண்கின்றோம்.

அந்தத் தலைவன் கேட்கின் றான் 'அதற்குள் வீடு வந்து விட்டதா? இந்தக் குதிரைகளுக்குப் பதில் நீ என்ன காற்றையா குதிரைகளாய்ப் பூட்டினாய்? அல்லது வேகமாகச் செல்லுகின்ற என் மனதை நீ தேராகப் பூட்டி னாயோ - வான் வழங்கு இயற்கை வலி பூட்டினாயோ, மான் உருவாக நீ மனம் பூட்டினாயோ' என்று சொல்லி அந்த அள்வில் அப்படியே விட்டுவிடாமல் எவ் வளவு அருமையான பண்பு அந்தத் தேர்ப் பாகனை நீ வா, என்னோடு இருந்து இன்று சாப்பிட வேண்டுமென்று சொல்லி

★ ★ ★

**நாம் இலட்சியத்தை நோக்கி எவ்வளவுதூரம் போகிறோம் என்பது பின்பற்றும் வழிகளின் தூய்மையையே பொறுத்திருக்கிறது.**

**— அண்ணல் காந்தியடிகள்**

★ ★ ★



வருவதும் போவதும் இன்பமும் துன்பமும்.
வந்தால் போகாதது புகழும் பழியும்.
போனால் வராதது மானமும் உயிரும்.
தானாக வருவது இளமையும் முதுமையும்.
நம்முடன் வருவது பாவமும் புண்ணியமும்.
அடக்க முடியாதது ஆசையும் துக்கமும்.
தவிர்க்க முடியாதது பசியும் தாகமும்.
நம்மால் பிரிக்க முடியாதது பந்தமும் பாசமும்.
அழிவைத் தருவது பொறாமையும் கோபமும்.
எல்லாருக்கும் சமமானது பிறப்பும் இறப்பும்.

–திருமுருக கிருபானந்த வாரியார்

வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறான்.

நம்முடைய தாய்க் குலம் சற்று நினைக்க வேண்டும். எப்போது வருவான் என்று நாம் காத்துக் கொண்டு இருப்போம். வரும் போதே ஒரு விருந்தாளியைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தான் என்றால், கட்டாயமாக நம்முடைய மனம் சுருங்கும். ஆனால் அந்தத் தலைவி-அவன் 3,4 மாதங்களுக்கு மேலாக இல்லத்தை விட்டு வெளியே செல்ல, அந்தத் தலைவி தலைவனுக்காக காத்துக்கொண்டு இருக்கிறாள். அந்த அன்புடை நெஞ்சம், ஒரு விருந்தாளியோடு வந்தான் என்று சொன்னதும் அந்தத் தேர்ப் பாகனை விருந்தினனாக ஏற்று உபசரிக்கிற அந்தப் பண்பு நம்மிடையே எங்கே போயிற்று?

தொலைக்காட்சியில் பல காட்சி அமைப்புகள் வந்ததற்குப் பிறகு, பல அலைவரிசைகள் வந்ததற்குப் பிறகு- யாரேனும் நம் வீட்டுக்கு வந்தால் மனம் சுருங்குகிறது. நல்ல நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டு இருக்கும் போது இவர்கள் வந்து விட்டார்களே என்று நினைக்கின்ற பெண் உள்ளங்களையும், என்று நினைக்கின்ற உறவினர்களையும் நாம் இப்போது பார்க்கிறோம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலைப் பொழுதில் நிறைய வீட்டுக்குச் செல்வோம், நண்பர்களையும் பார்ப்போம்- உறவினர்களைப் பார்ப்போம்- என்ற நிலைமைகள் மாறி எப்போதும் நம்முடைய தொலைக்காட்சிப் பெட்டியின் அருகில் நாம் உட்கார்ந்து கொண்டு இருக்கிற சமயத்தில் இந்த விருந்தோம்பல் எந்த அளவுக்கு நடைமுறையில் குறைந்து கொண்டு வருகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இங்கே இருக்கின்ற மலேசிய அன்பர்கள் எல்லாம், நாங்கள் சென்று இருந்த காலகட்டத்தில் அவ்வளவு அன்பாக எங்களை விருந்தோம்பினார்கள். அவர்களுக்கு இங்கு ஏதேனும் குறைபாடுகள் இருந்தாலும் கூட தயவுசெய்து அவர்கள் அதைப் பொருட்படுத்தக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்வேன்.

ஏன் என்றால் தமிழர்கள் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அந்த விருந்தோம்புகின்ற பண்பினை மிக அருமையாகக் கடைப்பிடிக்கின்றனர். 'அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர் கோடலும் இழந்தேனே' என்று தான் கண்ணகி வருந்தினாள். கோவலனோடு இருக்கின்ற இன்பமான வாழ்க்கை போயிற்றே என்று நினைக்கவில்லை. என்னுடைய சொத்துப் போயிற்றே; செல்வம் போயிற்றே; இளமை போயிற்றே என்று நினைக்கவில்லை. நாங்கள் வாழ்ந்த காலகட்டத்தில் சேர்ந்து இருந்தால், நாங்கள் சிலருக்கு விருந்து உபசாரம் செய்து இருப்போமே என்று நினைத்து வருந்தினாள் என்று பார்க்கிறோம். அந்த அற்புதமான விருந்தோம்புகின்ற பண்பாடு, அந்த அற்புதமான கணவனை விட்டுக் கொடுக்காத தன்மை அந்தக் காதல் இருவர் கருத்தொருமித்த ஆதரவுபட்ட இல்லற வாழ்க்கையை, அந்தச் சங்க இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

*



*Phone: 571406 - 572853 (STD-0422)*

*Residence: 815439 (STD-0421)*

*(Kalliapalaya-Exchange)*

# சூர்யா ஏர் கம்ப்ரசர்

எல்லைத் தோட்டம், பீளமேடு,

கோவை.4


எங்களிடம் வீட்டு உபயோகத்திற்கு
பெல்ட் இல்லாத கம்ப்ரசர், மோனோபிளாக்
மோட்டாருடன் இரண்டு வருட உத்தரவாதத்துடன்
செய்து தருகிறோம். மேலும், 400 அடி ஆழம் வரை
5 HP - 15 HP வரையிலும் தோட்டத்து விவசாய
உபயோகத்திற்கு மிகச் சிறந்த முறையில்
உத்தரவாதத்துடன் டாங்குடன் அமைத்துக்
கொடுக்கப்படும்.

குறைந்த விலையில் சூர்யா கதிரடிக்கும் மிஷின்
விவசாயத்திற்குச் செய்து கொடுக்கப்படும்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்

# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சிறப்பு அம்சங்கள்

- $5\frac{1}{2}$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95

மாணவர் பக்கம்

# பெண் கல்வி




**எஸ். ராஜகோபால்**
**7-ஆம் வகுப்பு**
**அரசு ஆண்கள்**
**உயர்நிலைப்பள்ளி**
**சூலூர்,**
**கோயம்புத்தூர்.**


"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

- என்பது கல்வியைக் குறித்து வள்ளுவர் கூறிய கருத்து. கல்வி அழியாது, சிறந்த செல்வமாக அமைந்து பிறவிகள்தோறும் துணைநிற்பது. அத்தகைய கல்வி ஆண், பெண் என்னும் இருபாலருக்கும் பொதுவானது. சங்க காலத்திலும், அதற்கு முன்பும் பெண்கள் கல்வியில் வல்லமை பெற்று விளங்கினர். சங்க காலத்தில் ஔவையார், காக்கைப் பாடினியார், இளவெயினி போன்ற பல பெண்கள் கற்பும் பொற்பும் பெற்றுத் திகழக் காரணம் அவர்கள் பெற்ற கல்வியே ஆகும்.

**பெண் கல்வியின் இன்றியமையாமை**

'நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும், திமிர்ந்த ஞானச் செருக்கும்' கொண்டு விளங்குவதே பெண் குலத்திற்கு உரிய பண்பு. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவே விழைகிறார்கள்.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்க்ள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண்'

-என்ற எட்டயபுரத்துக் கட்ட பொம்மன் பாட்டுக்கொரு புலவன் பாரதியார் கண்ட கனவு நனவாகி வருகிறது. மேலும் நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகமாக விளங்க வேண்டுமென்றால், பெண்கல்வி மிக இன்றியமையாதது. எத்துறையிலும் ஈடுபட்டுப் பெண்கள் பணிபுரிய முடியும் என்பது அறிஞர் பலரது முடிவு.

'தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளுங்கை' என்பது நாம் இன்று கண்கூடாகக் காண்பதாகும். வானூர்தி ஓட்டலாம் பெண்கள்; வையகம் ஆளலாம் பெண்கள் என்ற கூற்று இன்று, உண்மையாகி விட்டது. பெண் ஒருத்தி கல்வி பெற்றால் அவள் வாழும் குடும்பம் ஒளி பெற்றுத் திகழும். குடும்பத்தின் ஒவ்வொரு செயலும் திருத்தமாக நடைபெறும்.

'மங்கையராய்ப் பிறப்பதற்கே-நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா'

- என்பது கவிமணியின் கனிமொழி, ஆனால், நாடு விடுதலை பெறுவதற்கு முன் அடுப்பூதும், பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கும் ஒடப் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அண்ணல் காந்தியடிகள், இராஜாராம் மோகன்ராய், திருவிக., பெரியார் ஈ.வே.ரா. போன்றோர் மகளிர் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டனர். எல்லா நிலைகளிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ வழி தேடினர். இன்றைய அரசு மகளிர்க்கெனப் பள்ளிகளும், கல்லூரிகளும் அமைத்துப் பெண் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. பெண்கள் கல்வி அறிவு பெற்றுப் பீடு நடை போடுகிறார்கள்.

**பெண் கல்வியின் நன்மைகள்**

ஆண்கள் தத்தம் அலுவல் காரணமாக வெளியே செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, பெண்கள் கல்வியறிவு பெற்றிருந்தால் தம் குழந்தைகளுக்கெல்லாம் கல்வியறிவு புகட்ட முடியும். அறியாமை நீங்கப்பெற்ற பெண் மணிதான் குடும்பத்தை நன்கு நடத்த முடியும். குடும்பத்தைத் திறம்பட ஆளக்கூடிய பெண் நாட்டையும் திறம்பட ஆளப் பயிற்சி பெறுகிறாள். சான்றாக, அன்னை இந்திரா காந்தி இந்தியாவை ஆண்டு உலகப்

பெரும்புகழ் பெற்றார். சட்ட மன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் மகளிர் இடம்பெற்று நாட்டுக்கு நன்மை சேர்க்கவும், கல்வி, கலை, மருத்துவம், சட்டம், பொறியியல், விஞ்ஞானம், போன்ற துறைகளில் சிறந்து விளங்கி நாட்டையும் வீட்டையும் நலம் பெறச் செய்வதும், புகழ் பெறச் செய்வதும் பெண் கல்வியே அன்றி வேறொன்றுமில்லை.

'மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்'

- என்னும் பாரதியின் இனிய பழம் (கனி) போல நாட்டின் கண்களாகிய பெண்கள் எல்லாத் துறைகளிலும், பல்லாற்றானும் முன்னேற்றம் பெற்று வைய வாழ்வு தன்னில் இணையற்ற அறிவும், ஆற்றலும் பெற்றுப் பீடு நடை போட வேண்டும்; வளையல் பூட்டும் கைகள் உலகத்தையே வளைத்து ஆளும் கைகளாக மாறும், மாற வேண்டும்!

---

**'தமிழரசு' கோயம்புத்தூர் மாவட்டச் சிறப்பிதழ் வெளியிட்ட நாம் அப்பகுதி மக்களிடமிருந்து கதை, கவிதை, கட்டுரை, ஓவியங்கள் கேட்டிருந்தோம் அவற்றுள் சிறந்தவை இந்த இதழில் அணிசெய்கின்றன.**

## மக்களின் ஒருமைப்பாட்டால் பாரதம் காப்போம்!





**எம். மகாதேவன்**

**ஓவிய ஆசிரியர்**
**தேவாங்க மேல்நிலைப்பள்ளி**
**கோவை-2.**

## கோயமுத்தூர் மாவட்டம்

# ஆனைமலை ஊராட்சி ஒன்றியம்

## 1993-94 முடிவுற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் 1994-95 செயல்படுத்தப்படும் பணிகள்

| வ. எண் | வேலையின் பெயர் | வேலையின் எண்ணிக்கை | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|---|
| | **பொது நிதி 1993-94** | | |
| 1. | இரண்டடுக்கு மெட்டல் சாலைகள் | 20 | 19.84 |
| 2. | சாலை மேம்பாடு செய்தல் | 4 | 0.46 |
| 3. | தரைமட்டத் தொட்டிகள் கட்டல் | 1 | 0.58 |
| 4. | சிறு பாலம் கட்டல் | 1 | 0.20 |
| 5. | வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 9 | 1.85 |
| 6. | புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல் | 3 | 1.05 |
| 7. | ஆழ்குழாய்க் கிணறுகளில் கைபம்பு பொருத்துதல் | 5 | 1.75 |
| 8. | புதிய ஏர்கம்பிரசர் மின் மோட்டார் பொருத்துதல் | 7 | 5.47 |
| | **மொத்தம்** | 50 | 31.20 |
| | **1994-95** | | |
| 1. | இரண்டடுக்கு மெட்டல் சாலைகள் | 6 (6 கி.மீ.) | 7.10 |
| 2. | சாலை மேம்பாடு செய்தல் | 2 (2கி.மீ.) | 2.80 |
| 3. | சிறு பாலம் கட்டல் | 6 | 1.20 |
| 4. | வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டல் | 2 | 0.95 |
| 5. | புதிய ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்தல் | 1 | 0.45 |
| 6. | புதிய ஏர்கம்பிரசர் மினி மோட்டார் பொருத்துதல் | 1 | 1.42 |
| | **ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 1993-94** | | |
| 1. | தொகுப்பு வீடுகள் கட்டுதல் | 50 | 9.60 |
| 2. | பள்ளிக் கட்டடம் கட்டல் | 4 | 4.80 |
| 3. | ஊராட்சிப் பணிகள் | 152 | 30.79 |
| 4. | சாலைகளை அமைத்தல் | 1.35 கி.மீ. | 1.50 |
| 5. | மயானம் பாதையமைத்தல் | 4.5 கி.மீ. | 2.25 |
| 6. | சமுதாயக் கூடம் கட்டுதல் | 1 | 0.67 |
| 7. | சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் | | 1.33 |
| | | | 50.94 |
| 8. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ளவர்கள் | 779 | மானியம் 21.82 |
| 9. | டோக்ராக்குழு உறுப்பினர்கள் | 135 | 2.91 |
| | **1994-95** | | |
| 1. | தொகுப்பு வீடுகள் கட்டுதல் | 70 | 14.70 |
| 2. | பள்ளிக் கட்டடம் கட்டுதல் | 4 | 6.00 |
| 3. | ஊராட்சிப் பணிகள் | 64 | 10.51 |
| 4. | சாலைகள் அமைத்தல் 3 வேலை | 3.00 கி.மீ. | 6.00 |
| 5. | சமுதாயக் கூடம் கட்டுதல் | 4 | 6.00 |
| 6. | சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் | 1.10 | 44.31 |
| 7. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெற உள்ளவர்கள் | 800 | 61.162 |
| 8. | டோக்ரா குழு உறுப்பினர்கள் | 10 | |

**க. தேவராஜன்**
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
ஆனைமலை

**ந. இராதாகிருஷ்ணன்**
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்
ஆனைமலை

**எஸ். கந்தசாமி, பி.ஏ.,**
தனி அலுவலர்
ஆனைமலை ஊராட்சி ஒன்றியம்
மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலர்,
பொள்ளாச்சி

# கோவைச் செய்திகள்



☆ பெரியநாயக்கன் பாளையத்திலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் 1994-95-இல் அமைக்கப்பட்டுள்ளது அறிவொளி நகர். இதற்குக் கோவையிலிருந்து தனிப்பேருந்து வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

☆ கோவை மாவட்டத்தில் உள்ள பில்லூர் அணைக்கட்டு ரூ.17.5 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பாதி மாவட்டத்திற்குமேல் பயனடைகிறது; இவ்வளவு பெரிய அணைக்கட்டு இந்தியாவில் வேறெங்குமே இல்லை!

☆ கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் ரூ.1.9 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு பெரிய விளையாட்டுத்திடல் - ஸ்டேடியம் அமைய விருக்கிறது. அதேபோலத் திருப்பூரில் ஒரு ஸ்டேடியமும், நீச்சல் குளமும் ரூ.7 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

☆ கோவை சாஸ்திரி மைதானத்தில் ரூ.2.63 கோடியில் 'ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ்' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

☆ கோவை மாவட்டத்தில் உள்ள பேரூர் அருள்மிகு பட்டீசுவரர் திருக்கோயில் திருப்பணிகள் ரூ.10 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன; கோயிலை ஒட்டியுள்ள நொய்யல் ஆற்றில், படித்துறை கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இக்கோயிலில் ஆண்டுதோறும் 'நாட்டியாஞ்சலி' நிகழ்ச்சி நடத்தப்படவிருக்கிறது.

☆ கோவை மாவட்டத்தில் சமூகநலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 22 வகையான கன்றுகள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

☆ கடந்த ஐந்தாண்டுக் காலமாக, இந்தியாவிலேயே 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் கோயம்புத்தூர் மாவட்டம்தான் முதலிடம் பெற்றுவருகிறது.



✪ ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முன்னர், கடைச் சங்க காலத்தில் - துளுநாடு, சேரநாடு, பாண்டியநாடு, சோழநாடு, அருவநாடு, கொங்குநாடு எனத் தமிழகம் ஆறு நாடுகளாகப் பிரித்திருந்தது. தமிழ்நாட்டின் இடையே, கடற்கரை இல்லாத உள்நாடாகக் கொங்குநாடு(கோவைப்பகுதி) அமைந்துள்ளது.

# கோவை மாவட்டம்: குடிநீர் வழங்கும் பணிகள்

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோவை மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களில் குடிநீர் வழங்கும் திட்டம்

**கோ**வை மாவட்டத்தில், கோவை மாநகருக்குத் தெற்கே சுமார் 40 கிலோ மீட்டரில் மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் மிதமான தட்பவெட்ப நிலையுடன் ஒரு பெரிய விவசாய நிலப்பரப்பு கொண்ட நகரம் பொள்ளாச்சி. கோவை மாவட்டத்திலேயே தென்னை வளம் மிகுந்த பகுதியும் இதுவே.

தமிழ்நாட்டில் பொள்ளாச்சி நகரம் மிகவும் பிரசித்தி பெற்ற வியாபாரச் சந்தையாக விளங்குகிறது. இதன் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 82,354. வழியோரக் கிராமங்களின் மக்கட் தொகை 34,200. பொள்ளாச்சி நகருக்குச் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே நகருக்கு மேற்கே சுமார் 9 கி.மீ. தூரத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஆழியார் நதியில் வடிகால் படுகை (Infiltration Gallary) அமைத்துச் சுத்தமான குடிநீர் இந்நகர மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

1970-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் வடிவமைக்கப்பட்டு 1975-ஆம் ஆண்டு இந்நகர மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. அப்போதைய மக்கள் தொகை சுமார் 50,000. பெருகி வரும் மக்கள் தொகையின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 2016-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் 1,77,500 மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு இக் குடிநீர்த் திட்டம் உலக வங்கியின் கடன் உதவியுடன் 1992-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 110 லிட்டர் வீதமும் வழியோர கிராமங்களுக்கு 44,460 மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு 40 லிட்டர் வீதமும் வழங்கப்படுகின்றது.

இத்திட்டம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் 30.9.94 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

**இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்ட பணிகள் விவரமாவது:**

1. இயல்பு நீர் வாங்கும் கிணறு.
2. இயல்பு நீர் இணைப்புக் குழாய்கள்.



3. இயல்பு நீர் உறிஞ்சு கிணறு மற்றும் உந்து விசை அறை.

4. நீர் சுத்திகரிப்பு நிலையம்.

5. சுந்த நீர் சேகரிப்புத் தொட்டி.

6. சுந்த நீர் உந்து விசை அறை.

7. சுந்த நீரேற்றுக் குழாய்கள்.

8. சுந்த நீர் அதி உந்து நிலையம் மற்றும் விசைகள்.

9. மண்டல பகிர்மான சுத்த நீர் மேல் நிலைத் தொட்டிகள்

10. நகரின் சுந்த நீர் பகிர்மானக் குழாய்கள்.

**திட்டச் சிறப்பியல்புகள்**

1. தலைமைப் பணியிடம்

அ. நீர் ஆதாரம்

ஆழியார் நதியில் அம்பராம்பாளையத் திற்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கும் நீர் வாங்கிக் கிணறு.

ஆ. இயல்பு நீரேற்றும் விசைகள்

40 குதிரைத்திறன் கொண்ட 2 நீரேற்றும் விசைகள் .(16மீ X நிமிடத்திற்கு 7,150 லிட்டர்கள்)

2. இயல்பு நீர் பிரதானக் குழாய்

500 மி.மீ. இரும்புக் குழாய்கள் - 100 மீ

3. நீர் சுந்திகரிப்பு நிலையம்

நாளொன்றுக்கு 147 இலட்சம் லிட்டர் நீர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட முழுமையான சுந்திகரிப்பு நிலையம்.

4. சுந்த நீர்த்தேக்கத் தொட்டி

கொள்ளளவு 6 இலட்சம் லிட்டர்கள்.

5. சுந்த நீரேற்றும் விசைகள் 150 குதிரைத் திறன் கொண்ட 2 நீரேற்றும் விசைகள் (70மீ X நிமிடத்திற்கு 6,835 லிட்டர்கள்)

6. சுத்த நீர் பிரதானக் குழாய்கள்

| | |
|---|---|
| வார்ப்பிரும்புக் குழாய்கள் | 7.60 கி.மீ. |
| கல்நார் சிமெண்ட் குழாய்கள் | 2.20 கி.மீ. |
| மொத்தம் | 9.80 கி.மீ. |

7. சந்தைப் பேட்டையில் அமைக்கப் பட்டிருக்கும் அதி நீருந்து நிலையம்.

கொள்ளளவு: 3.5 இலட்சம் லிட்டர்கள்.

நீரேற்று விசைகள்: 125 குதிரைத் திறன் கொண்ட 2 நீரேற்று விசைகள் 65மீ x நிமிடத்திற்கு 6,835 லிட்டர்கள்.

8. மேல்நிலை நீர்த் தொட்டிகள்

| | | கொள்ளளவு |
|---|---|---|
| அ. மண்டலம் I | 10.5 | இலட்சம்லிட்டர்கள் |
| ஆ. மண்டலம் II | 11.0 | " |
| இ. மண்டலம் III | 13.5 | " |
| ஈ. மண்டலம் V | 11.5 | " |
| உ. ஜோதிநகர் | 3.0 | " |

9. பகிர்மானக் குழாய்கள் 60 கி.மீ.

10. வீட்டு இணைப்புக் குழாய்கள் 13,570

11. 11 வழியோரக் கிராமங்கள்

அ. மேல்நிலைத் தொட்டிகள் எண்ணிக்கை 6.

ஆ. பகிர்மானக் குழாய்களின் நீளம் 7.65 கி.மீ.


இ. பொதுக் குழாய்களின் எண்ணக்கை 21.

12. திட்ட மதிப்பீடு.

அ. பிரதானத் திட்டம் ரூ.1143 இலட்சங்கள்
ஆ. பொள்ளாச்சி நகராட்சி ரூ.1014 "
இ. 11 வழியோரக் கிராமங்கள் ரூ.129 "

**பயனடையும் பகுதிகள்**

| பெயர் | மக்கள் தொகை (2016-இல்) | திட்ட மதிப்பு |
|---|---|---|
| 1. பொள்ளாச்சி நகராட்சி | 1,77,500 | 1014 இலட்சங்கள் |
| 2. சிங்காநல்லூர் | | |
| 3. கெட்டி மேளம் புதூர் | | |
| 4. அகிலாண்டபுரம் | | |
| 5. | | |
| 6. போடி பாளையம் | | |
| 7. நஞ்சேகவுண்டன் புதூர் | 44,460 | 129 இலட்சங்கள் |
| 8. கருப்பம்பாளையம் | | |
| 9. காளிபாளையம் | | |
| 10. குஞ்சிபாளையம் | | |
| 11. ஊத்துக்குளி | | |
| 12. மோதிராபுரம் | | |



# Raw material at our back door.

# Global markets at our threshold.

## Possible only if... you're always ahead of time.

Manali, Madras. A petrochemical landmark on the map of India. It's going to become even more renowned with TPL's futuristic blueprint. For a state-of-the-art EPICHLOROHYDRIN plant. A plant that's twice blessed. One, with rich raw material resources from the neighbouring plants of Madras Refineries Ltd and SPIC Heavy Chemicals Division. And two, with a market that's virtually global. Needless to say, EPICHLOROHYDRIN from the 10,000 MT capacity plant will be in demand from Day One, and will meet the needs of the entire Indian industry and more. It's an important ingredient in epoxy resins which find application in many consumer goods and industries. And also in pesticides and pharmaceuticals. Substituting imports completely while enhancing exports considerably. It will be our sequel to the earlier success story: Linear Alkyl Benzene - SUPERLAB. **TPL.** This is really where we're poised. On the shores where India meets the world.

**TAMILNADU PETROPRODUCTS LIMITED**

6, Nungambakkam High Road, Madras – 600 034 Tel: 8254545, 8252568/69 Fax: 044-8255798

***AHEAD OF ITS TIME***

HTA.7161.95

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

